# ஆன்மீக சுக வாழ்வு

ஒரு மருத்துவரானவர், ஒரு மனிதனாவனனை நோக்கி: அதின் அதின் காலத்திலே அந்தந்த பருவத்திற்கேற்ப, போஷாக்குள்ள உணவை உண்டு, போதியளவு தண்ணீரை குடித்து சுகதேகியாக வாழ்வது உனக்கு விருப்பமா? அல்லது, கண்டதையும் உண்டுவிட்டு, படிப்படியாக விற்றமின் மாத்திரைகள், நோய்கான மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சைகள் என்று உன் வாழ்விலே கசப்புக்களையும், நோவுகளையும், வேதனைகளைளும் உண்டாக்கிக் கொள்ள விரும்புகின்றாயா என்று கேட்டார். பிரியமான சகோதர சகோதரிகளே, உங்களுடைய ஆன்மீக வாழ்விலே, கர்த்தருடைய வேதம் உங்களுக்கு எப்படியாக இருக்க வேண்டும் என்பதை நீங்கள் வாஞ்சிக்கின்றீர்கள். ஆவிக்குரிய ஜீவ உணவாகவோ அல்லது பெலவீனத்திறகு கொடுக்கப்படும்விற்றமின்கள் ஊட்டசத்துள்ள பிரதி உணவாகவோ அல்லது பெலவீனங்களை கவனியாமல் இருக்கும் போது உண்டாகும் நோயை கட்டுப்படுத்த கசப்புள்ள மருந்தாகவோ அல்லது நாட்பட்ட நோயிலிருந்து உயிரைக் காக்க செய்யும் சத்திர சிகிச்சையாகவோ இருப்பதை விரும்புகின்றீர்கள். நானே வானத்திலிருந்து வந்த ஜீவ உணவு, நானே ஜீவ தண்ணீர் என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். அந்த வார்த்தைகயை உட்கொண்டு, அந்த பானத்திலே பானம் பண்ணுகின்றவனுக்கு ஆவிக்குரிய பெலவீனமோ, ஆவிக்குரிய நோயோ, உண்டாகுவதில்லை. ஆனால், ஜீவ வார்த்தைகளை கைகொள்ளாமல், ஜீவ தண்ணீரை பருகாமல் இருக்கின்றவர்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையானது, பெலவீனமடைந்து, நாட்கள் செல்லச் நோயுற்று, காலங்கள் கடந்து செல்ல நாட்பட்ட நோயாக மாறிவிடுகின்றது. அவையாவற்றிற்கும் கர்த்தருடைய வேதமே ஊட்டச் சத்தும், மருந்தும் சத்திர சிகிச்சையுமாக இருக்கின்றது. சில வேளைகளிலே அறிந்தோ அறியாமலோ நாம் பெலவீனத்திற்குள்ளாகின்றோம். அது எங்கள் வாழ்வின் தொடர்சியாக திரும்பத் திரும்ப நடக்கும் காரியமாக மாறிவிடத் தேவையில்லை. திராட்சை செடியாகிய இயேசுவிலே ஒட்டப்பட்டிருக்கும் கொடியானது, நல்ல கனிகளை கொடுப்பதற்கு வேண்டிய யாவற்றையும் அந்த செடியிலிருந்து பெற்றுக் கொள்கின்றது. எனவே, பெலவீனமடைந்து, ஆன்மீக நோய்க்கு நம்மை நாமே ஒப்புக்கொடாமல், ஜீவ உணவும், ஜீவ தண்ணீருமாகிய தேவ வார்த்தையை அனுதினமும் தியானித்து, அந்த வார்த்தைகளை கைகொள்கின்றவர்களாக வாழ்வோமாக

**யோவான் 6:55**

என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது.

**ஜெபம்**: நித்திய ஜீவனைக் கொடுக்கும் வார்த்தையை எனக்கு தந்த தேவனே, நான் உம்முடைய வாழ்வு தரும் வார்த்தைகளை இருயத்தில் பதித்து வைத்து, அதன் வழியிலே என்னை கரம்பிடித்து நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஆரோக்கியம் தரும் உணவு

**எரேமியா 15:16**

**உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்;**

ஒரு சிறு பிள்ளையானது, ஆரோக்கியமுள்ளதாக வளர்ந்து வருவதற்கு, பிள்ளைக்கு அவசியமான போஷாக்கு நிறைந்த உணவு வகைகளையும், அந்தக் பருக வேண்டிய பானத்தையும், அவன் சுறுசுறுப்பாக இருப்பதற்கு அவன் நாளாந்தம் எடுக்க வேண்டிய பயிற்சியை குறித்து அந்தப் பிள்ளையினுடைய பெற்றோர் நன்று அறிந்திருந் தார்கள். பெற்றோரும், மருத்துவ ஆலோசனையின்படி, தங்கள் பிள்ளையின் உடல் வளர்சிக்கும் ஆரோக்கியமான வாழ்விற்கு வேண்டிய, சத்துள்ள உணவு வகைகளையும், பானங்களையும், குறித்த நேரத்தில் தங்கள் பிள்ளைக்கு கொடுத்து, நன்றாக கவனித்து வந்தார்கள். அவை யாவும் சிறு பிள்ளையானது விரும்பும் பிரகாரமாக சுவையானதாக இல்லாதிருந்த போதிலும், பிள்ளையின் நலனுக்காக அவற்றை தவறாமல் கொடுத்து வந்தார்கள். நாம் ஆரோக்கியமான ஆவிக்குரிய வாழ்க்கை வாழும்படிக்கு, ஆவிக்குரிய மனுஷனாவனுக்கு, தேவனுடைய ஜீவனுள்ள வசனமானது இன்றியமையாததாக இருக்கின்றது என்பதைக் குறித்து நேற்றைய நாளிலே தியானித்தோம். ஆரோக்கியமான அந்த ஜீவ வசனமானது, எப்போதும் நம்முடைய மாம்ச விருப்பத்தின்படி இருகப்போதில்லை. ஆவிக்குரிய உணவின் அவசியத்தை அறிந்த விசுவாசியானவனொருவன், கிடைக்கும் ஜீவ உணவை உட்கொள்ளாமல் இருப்பானாக இருந்தால், அவனைக் குறித்து நீங்கள் என்ன சொல்வீர்கள்? ஒரு மனிதனானவன், தன் வீட்டிலே அருமையான ஆரோக்கிய மான உணவு பதார்த்தங்களை சமைக்கலாம். அதை அழகாக தட்டிலே வைத்து, மேஜையின் மேல் நேர்த்தியாக வைத்திருக்கலாம். ஆனால், அவன் அதை உண்ணாமல் ஒரு காட்சிப் பொருளைப் போல அதை வைத்தருப்பானாகில், அதனால் உண்டாகும் பலனை அவன் அடையாமல், காலப்போக்கில் உடல் ஆரோக்கியத்தை இழந்து போவான். அது போலவே ஒருவன் திருவசனத்தைக் கேட்கலாம், அதை அழகாக எழுதி சுவரிலே மாட்டிக் கொள்ளலாம். அதை மனப்பாடம் செய்து, அதைக் குறித்து பேசலாம். ஆனால் அவன் கேட்டு, மனம்பாடம் செய்து, சுவரில்மாட்டிய திருவசனத்தைதன்வாழ்வில் உட்கொள்ளாமல் போவானாகில் அதனால் உள்ளான மனுஷனானது நாளடைவிலே பெலவீனமடைந்து போய் விடும். எனவே ஆவிக்குரிய வாழ்விலே ஆரோக்கியம் குன்றி, பெலவீனப்பட்டுப் போகாதபடிக்கு, ஜீவ உணவாகிய, ஜீவ தண்ணீரா , ஜீவனுள்ள தேவ வார்த்தையை உட்கொள்வோமாக.

**ஜெபம்**: நல் வாழ்வு அடையும்படி ஜீவ வார்த்தைகளை எனக்கு தந்த தேவனே, நான் ஆரோக்கியமான வாழ்க்கை வாழும்படிக்கு உம்முடைய திருவார்த்தைககளை கைகொள்கின்றவனாக வாழும்படிக்கு கிருபை செய்வீராக.. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வார்த்தையைக் குறித்த வாஞ்சை

ஒரு புதிதாய் பிறந்த குழந்தை பால் குடிப்பதற்கு எவ்வளவு ஆர்வமுள்ளதாகஇருக்கின்றது? அந்த குழந்தைக்கு யாரும் அதை கற்றுக் கொடுக்கவில்லை. அது சீக்கிரமாக எந்த நிபந்தனைகளுமின்றி பாலின் மேல் வாஞ்சையாக இருக்கின்றது. தேவ வசனத்தின்மேல் நாம் எவ்வ ளவாக, எப்படியாக வாஞ்சையாக இருக்க வேண்டும் என்று காண் பித்தற்காக, அப்போஸ்தலராகிய பேதுரு, ஒரு குழந்தைக்கு பாலின்மேல் இருக்கும் வாஞ்சையைப் போல நாமும் திருவசனத்தை வாஞ்சிக்க வேண்டும் என்று அறிவுரை கூறியிருக்கின்றார். குழந்தை வளர்ந்து வரும் போது, பாலை மட்டுமல்ல, உடல் வளர்ச்சிக்கு தேவையான ஊட்டச்சத்துள்ள மற்றய ஆகாரங்களையும் உண்டு வளரும். ஆனால், சிறு குழந்தையாய் இருக்கும் போது, எப்படியாக பாலினமேல் வாஞ்சையாக இருந்ததோ, அதே வாஞ்சையோடு ஊட்டசத்துள்ள மற்றய ஆகாரங்களையும் உட்கொள்ள வேண்டும்என்பதையே அவர் வலியுறுதிக் கூறியிருக்கின்றார். மனிதர்கள் ஆண்டவராகிய இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, ஆவியினாலும், ஜலத்தினாலும் மறுபடியும் பிறந்த போது, கிறிஸ்துவுக்குள் குழந்தைகளைப் போல இருக்கின்றார்கள். அந்த நாட்களிலே, ஆண்டவர் இயேசுவின் நாமத்திற்கென்று, எதை செய்வதற்கும் உற்சாகமுள்ளவர்களும், ஆயத்தமுள்ளவர்களுமாக இருப்பார்கள். எந்த சாட்டுப் போக்கிற்கும்இடம் கொடாமல், ஆராதனைகளில் வாஞ்சையோடு கலந்து கொள்கின்றார்கள். அப்போது வேத வார்த்தைகளை கேட்கும் போது, இருதயம் கொழுந்து விட்டு எரிந்தது. ஆனால், ஆண்டுகள் கடந்து செல்லும் போது, அந்த வாஞ்சையானது தணிந்து அணைந்து போய்விடுகின்றது. பிரியமானவர்களே, நாம் மறுபடியும் புதிய சிருஷ்டியாக கிறிஸ்துவுக்குள் பிறப்பிக்கப்பட்ட போது, தேவ வசனத்தை குறித்து இருந்த வாஞ்சையானது நம்மிலே பெருக வேண்டும். அந்த வாஞ்சை நம்மில் குறைந்து போகும் போது, நம் ஆவிக்குரிய வாழ்விலே பெலவீனங்கள் தலை தூக்க ஆரம்பிக்கின்றது. சமரசங்களும், சாட்டுப் போக்குகளும், முறுமுறுப்புகளும் அவைகளின் அறிகுறிகளாக இருக்கும். ஒரு குழந்தைக்கு பாலை குடிப்பதற்கு இருக்கின்ற வாஞ்சையைப் போல, தேவனை அறிகின்றஅறிவிலேபெருகும்படிக்கு,தேவ வார்த்தைகயை கற்றுக் கொண்டு, கைகொ ள்ளும் வாஞ்சையானது நம்மிலே தினமும் பெருக வேண்டும்.

**1 பேதுரு 2:3**

**நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்.**

**ஜெபம்**:செய்கையையும் விருப்பத்தையும் உண்டு பண்ணுகின்ற தேவனே, உம்மை அறிகின்ற அறிவிலே வளர்ந்து பெருகும்படிக்கு திருவசனத்திலே வாஞ்சையாய் இருக்க ஆர்வமுள்ள இருதயத்தை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

திங்கள்| நவம்பர் 4

📖 மாலை வாசகம் – நீதி 3:8

# ஆத்துமாவை உயிர்ப்பிக்கும் வேதம்

பெற்றோரானவர்கள், தங்களுடைய மகனானவன் முதல் முறையாக பாட சாலைக்குபோகப் போகின்றான் என்பதை குறித்த மனப்பதற்றமுடைய வர்களாக இருந்தார்கள். குழந்தை நேற்று பிறந்ததைப் போல இரு ந்தது, ஆனால் ஆண்டுகள் சீக்கிரமாக கடந்து போய்விட்டது என்பதைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள். பாடசாலைக்கு செல்லும் முன்குறித்த நாள் வந்த போது, பெற்றோரானவர்கள், தங்களுடைய பிள்ளைக்கு வேண்டிய ஆரோக்கியமுள்ள உணவையும், குடிப்பதற்கு பான த்தைக்கு கொடுத்து, அவனுக்கு ஏற்ற ஆலோசனைகளை கொடு த்து அனுப்பினார்கள். ஆனால், அந்தப் மகனானவனுக்கோ, ஏதோ காரணத்திற்காக பெற் றோர் கொடுக்கும் உணவை முழுமையாக உண்பதற்கோ அல்லது பான த்தை முற்றாக குடிப்பதற்கோ விருப்பமில்லை. பெற்றோரானவர்கள், நாள் தோறும் நல்ல ஆலோசனைகளை கூறி வந்தாலும், அவன் உணவை முழுமையாக உண்ணாமலும், பானத்தை முற்றுமாக பருகாமலும் இரு ப்பதற்கு புதிய புதிய சாட்டுப் போக்குகளை சொல்லிக் கொண்டு வந் தான். மாதங்கள் கடந்து சென்ற பின்பு, அவன் உடல் பெலவீனமுற்றுப் போவதை ஆசிரியர்களும், பெற்றோரும் அவதானித்தார்கள். பெற்றோ ரானவர்கள், கரிசனையோடு, தங்களை மகனானவனை குடும்ப மருத் துவரிடம் கொண்டு சென்றார்கள். சிறுபையனானவன், பெலவீனமு ற்றிருப்பதால், அவனுக்கு விற்றமின்களையும், ஊட்டச் சத்துள்ள பிரதி ஆகாரத்தையும் கொடுக்கும்படி மருத்துவர் ஆலோசனை கூறினார். பெற்றோர், உடனடியாக அவைகளை வாங்கி தங்கள் மகனானவனுக்கு கொடுத்தார்கள். பிரியமான சகோதர சகோதரிகளே, நாம் வேறுபிரிக் கப்பட்டவர்களாக இருந்தாலும், உலகத்திலேயே வாழ்கின்றோம். உலகத்தார் மத்தியிலே நாம் வாழும் போது, நம்முடைய சிந்தையானது உலகத்தின் காரியங்களால் நிரப்பப்படுவதால், ஆவிக்குரிய உணவை நாம் தவிர்த்துக் கொள்ளும் போது, ஆவிக்குரிய பெலவீனங்கள் உண்டாகி விடுகின்றது. முறுமுறுப்புக்கள், சமரசங்கள், சாட்டுப் போக்கு கள் அந்தப் பெலவீனங்களின் சில அறிகுறிகளாக இருக்கும். , வேத வசனமே அவற்றிலிருந்து நம்மை மறுபடியும் உயிர்பிக்கின்ற ஊட்டச் சத்தாக இருக்கின்றது. அவருடைய குறைவற்ற வேதமே, நாம் ஆதிநி லைக்கு திரும்பும்படியாக புதிய உற்சாகத்தையும், பக்திவிருத்தியையும் உண்டாகும்படி, தெய்வீக ஆலோசனைகளையும் புத்துணர்சியையும் நமக்கு கொடுக்கின்றது.

**சங்கீதம் 19:7**

கர்த்தருடைய வேதம் குறைவ ற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பி க்கிறதுமாயிருக்கிறது;

**ஜெபம்**: சோர்ந்து போன வேளைகளிலே என்னைப் பெலப்படுத்தும் தேவனே, உம்முடைய ஜீவ வார்த்தைகளால் உண்டாகும் புது பெலனைத் தரித்தவனாக பெலவீனங்களை மேற்கொள்ள வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# “அருமருந்து”

ஒரு பிள்ளை, வாலிப பருவம் மலர்ந்ததும், வீட்டிலே பெற்றோர் கொடுக்கும் போஷாக்கு நிறைந்து உணவை உட்கொள்ள விரும்பமில்லை. மந்த போஷாக்கை நிவர்த்தி செய்வதற்கு மருத்துவர் கொடுத்த விற்றமின் மற்றும் ஊட்டசத்துள்ள பிரதி ஆகாரத்தின் சுவைகள் பிடிக்கவில்லை. அதனால், அவைகளையும் ஒழுங்காக உட்கொள்ளுவதில்லை. சுத்தமான தெளிவான தண்ணீருக்கு பதிலாக பலவகையான பானங்களால் அவன் தன் தாகத்தை தீர்த்துக் கொண்டான். ஆண்டுகள் கடந்து சென்றதும், மந்த போஷாக்கினாலே உண்டான பெலவீனமானது, நோயின் அறிகுறிகளை வெளிக் காட்ட ஆரம்பித்தது. பெற்றோர், தங்கள் மகனானவனை துரிதமாக மருத்துவரிடம் கொண்டு சென்றார்கள். மருத்துவர், வாலிபனுடைய நிலைமையை சோதித்தறிந்த பின்பு, அவனுக்கேற்பட்டிருக்கும் நோயிலிருந்து சுகமடைவற்கு, சில மருந்துகளை தவறாமல் எடுக்கும்படிக்கும், தகுந்த ஆகாரங்களை உண்டு, சுத்தமான தண்ணீரைக் குடிக்கும்ப டிக்கு அறிவுரை கூறினார். ஆம் பிரியமானவர்களே, நம்முடைய ஆவிக்குரிய வாழ்விலும் நாம், ஜீவ உணவாகிய, ஜீவ தண்ணீராகிய தேவ வார்த்தைகளை உட்கொள்ளாமல் போகும் போது, ஆவிக்குரிய வாழ்விலே பெலவீனத்தின் அறிகுறிகள் உண்டாகின்றது. அந்த பெலவீனங்களை தேவ ஆலோசனையின்படி மேற்கொள்ளாதவிடத்து, அந்த பெலவீனங்களானதுஆவிக்குரிய நோயாக மாறிவிடுகின்றது. அப்படிப்பட்ட வேளைகளிலே, தேவனுடைய வார்த்தை மட்டுமே நமக்குண்டான ஆவி க்குரிய நோயைக் குணமாக்கி ஆரோக்கியம் தரும் அரும் மருந்தாக இருக்கின்றது. மருந்துகள் சில வேளைகளிலே மிகவும் கசப்பாகவும், மாத்திரைகள் உட்கொள்வதற்கு கடினமானதாக இருப்பதைப் போல, ஆவிக்குரிய நோயிலிருந்து குணமடையும்படி செய்யும் தேவனுடைய அருமருந்தானது, நல்ல தகப்பனானவனுடைய சிட்சையைப் போல கசப்புள்ளதாக இருக்கும். ஆவிக்குரிய நோயிலிருந்து விடுதலையடைய, பின்வாங்கி போனவர்கள், தங்கள் நிலைமையை உணர வேண்டும். அவர்கள் உணர்வடையும்படி அவர்கள் மனக்கண்கள் பிரகாசிக்கப்பட வேண்டும். அவர்களுக்குள் இருக்கும் இருள் நீங்கும்படி, ஜீவ ஒளி பிரகாசிக்கப்பட வேண்டும். பெலவீனங்கள் நீங்கும்படிக்கு இருதயம் உணர்வடைய வேண்டும். இல்லாவிடில், முறுமுறுப்புக்கள்: தர்க்கங்களையும், மனக்கசப்புக்களையும், சண்டை, பிரிவினைகளையும், பிறப்பிக்கும்.

**நீதிமொழிகள் 3:8**

**அது உன் நாபிக்கு ஆரோக்கியமும், உன் எலும்புகளுக்கு ஊனுமாகும்.**

**ஜெபம்**: உடலுக்கெல்லாம் ஆரோக்கியம் தரும் ஜீவ வார்த்தையை எனக்கு தந்த தேவனே, அந்த வார்த்தையை என் இருதயத்தில் பதித்து வைத்து, அதை காத்துக் கொள்ள எனக்கு உதவி செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஆன்மீக நோயிலிருந்து விடுதலை

கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ? இரணவைத்தியனும் அங்கே இல்லையோ? பின்னை ஏன் என் ஜனமாகிய குமாரத்தி சொஸ்தமடையாமற் போனாள்? என்று தேவனாகிய கர்த்தர் தன்னுடைய ஜனங்களின் உணர்வற்ற வாழ்க்கையைக் குறித்து கூறியிருக்கின்றார். நாள்பட்ட புண் பழைய புண் என்பது போல, ஆவிக்குரிய நோய் கொண்டவர்கள் அதை ஆரம்பத்திலே கவனியாமல்போகும்போது,அது மனைந்து பரவி விடுகின்றது. சரீரத்திலே இருக்கும் நோய்களை கவனியாமல்,மருந்துகளை அசட்டை செய்து, அசதியாக இருப்பவர்களின் நிலைமையானது மோசமாக மாறிவிடுகின்றது. அப்படியான நிலைமைக்கு தள்ளப்படுகின்றவர்களுக்கு, உயிர் ஆபத்தை தவிர்த்துக் கொள்ளும்படிக்கு, காலதாமதமின்றி, சத்திர சிகிச்சை செய்யப்பட வேண்டும் என்று மருத்துவர் கூறிவிடுகின்றார்கள். அந்த சிகிச்சையின் போதும், சிகிச்சையின் பின்பும் அதிக வேதனை உண்டாயிருக்கும். விசுவாசிகளுடைய ஆவிக்குரிய வாழ்வில் உண்டாகும் நோய்களை கவனியாமல் விட்டு விடும் போது, அதனால் பரிய பின்விளைவுகள், அவர்களுக்கும், அவர்களைச் சூழ உள்ளவர்களுக்கும் உண்டாகிவிடுகின்றது. மனந்திரும்புகின்ற பாவியை மன்னிப்பதற்கு, நம்முடைய ஆண்டவராகிய இயேசு தயைபெருத்தவரும், உண்மையும் நீதியுமுள்ளவராக இருக்கின்றார். மனந்திரும்பும் கள்வனை கர்த்தர் மன்னித்து ஏற்றுக் கொள்வார். ஆனால் அவன் பூமியில் வாழும் நாட்களில், அவன் சம்பாதித்துக் கொண்ட கள்வன் என்கின்ற பெயரை மனிதர்கள் மறந்து போவார்களோ? இவ்வண்ணமாக, குடித்து வெறித்து, களியாட்டங்களில் இருக்கும் பின்மாற்றகாரன், மனந்திரும்ப அவனுக்கு சந்தர்ப்பம் உண்டு. அவனால் அவனுடைய மனைவி பிள்ளைகள், சகோதர சகோதரிகளுக்கு உண்டான நோவும் அவமானமும் அதிகமாக இருக்கும். இப்படிப்பட்ட நிலைமைக்கு சில விசுவாசிகள் தங்களைத் தாங்களே தள்ளி விழுத்திக் கொள்கின்றார்கள். முற்காலங்களிலே, தேவனுடைய வார்த்தையைக் கேளாமல், தங்கள் காதுகளை அடைத்துக் கொண்டவர்கள், உணர்வடையும் வரை சிறைவாழ்க்கைக்கு உட்படுத்தப்பட்டார்கள். அதுபோலவே, கீழ்படியாமல் இருக்கும் சில தேவ பிள்ளைகள் உணர்வடையும்வரை, தேவனானவர் தாமே, சில காரியங்களை அவர்களுடைய வாழ்விலே அனுமதிக்கின்றார். தயங்காமல் தாமதமின்றி கர்த்தரிடத்திற்கு திரும்புங்கள். அவர் தம்முடைய வார்த்தையை அனுப்பி குணமாக்குவார்.

**சங்கீதம் 107:20**

**அவர்தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி, அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார்.**

**ஜெபம்:** அன்பின் பரம தந்தையே, நான் ஆவிக்குரிய நோய் கொண்டு ஒடுங்கிப் போகாதபடிக்கு,உம்முடைய எச்சரிப்பின் சத்தத்தை கேட்டு, சீக்கிரமாய் உம்மிடம் திரும்பும் உணர்வுள்ள, இருதயத்தைத் தந்து என்னை வழி நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# விடுதலைக்கு வழி...

கர்த்தருடைய வார்த்தையைக் கேளாமல், அறிந்தோ அறியாமலோ, ஆவிக்குரிய வாழ்வில் பின்னடைவை சந்தித்திருக்கின்றீர்களா? சிறை வாழ்க்கை வாழ்வது போல, பல அடிமைத்தனங்கள் மேற்கொண்டு விட் டதா? ஜீவ போஜனத்தை தள்ளிவிட்டதால், ஆன்மீக நோய் பற்றிக் கொண்டு விட்டதா? தாமதமின்றி, தயக்கமின்றி, மனத் தாழ்மையோடு கர்த்தரிடத்திற்கு திரும்புங்கள். ஏசாயா என்னும் தீர்க் கதரிசியின் நாட்க ளிலே, தேவனாகிய கர்த்தர் தன் ஜனங்களை நோக்கி: வானங்களே கேளுங்கள், பூமியிலே, செவிகொடு, கர்த்தர் பேசுகிறார். நான் பிள்ஜ ளகளை வளர்த்து ஆதரித்தேன், அவர் களோ எனக்கு விரோதமாய்க் கலகம் பண்ணினார்கள். மாடு தன் எஜமானை யும், கழுதை தன் ஆண் டவனின் முன் னணையையும் அறியும், ஆனால் என் ஜனங்களோ அறிவில் லாமலும், உணர் வில்லாமலும் இருகின்றது என்றார். இன்னும் நீங்கள் ஏன் அடிக்கப்பட வேண்டும்? அதிகமாய் விலகிப் போகி றீர்களே, தலையெல்லாம் வியாதியும், இருதயமெல்லாம் பலட்சயமு மாய் இருக்கின்றது. உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைமட்டும் அதிலே சுகமில்லை. அது காயமும் வீக்கமும், நொதிக்கிற இரணமுள்ளது, அது சீழ் பிதுக்கப்படாமலும், கட்டப்படாமலும் எண்ணெயினால் ஆற்றப்ப டாமலும் இருக்கின்றது என்று பரிசுத்த வேதாகமத்தில் வாசிக்கின் றோம். பிள்ளைகள் எப்படி இந்த நிலைக்கு வந்தார்கள்? சிந்தித்துப் பாருங்கள். அவர்கள் ஆரோக்கியமான சுக வாழ்வு தரும் கர்த்தருடைய வேதத்தை மறந்து போனார்கள். ஆனாலும், உங்கள் பாவங்கள் சிவே ரென்றிருந்தாலும் உறைந்த மழையைப் போல் வெண்மையாகும், அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப் போலாகும். அது எப்படி ஆகும், பின்வாங்கி போனவர்கள் அதற்கு என்ன செய்ய வேண்டும்? "நீங்கள் மனம்பொருந்திச் செவிகொடுத்தால் தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள்" என்று தேவனாகிய கர்த்தர் கூறியிருக்கி ன்றார். பிரியமான சகோதர சகோதரிகளே, ஆரம்ப நாட்களிலே, ஆன்மீக வாழ்விலே,சுகதேகியாய் இருந்தேன், படிப்படியாக பின்னிட்டு, இன்று நோய்கொண்டவனாக இருக்கின்றேன் என்று துக்கத்திலேயே தரித்தி ருந்து நாட்களை விரயப்படுத்தாமல், உங்களுக்காக தன்னைப்பலியாக ஒப்புக்கொடுத்த கிருபை நிறைந்த ஆண்டவராகிய இயேசு விடம் திரு ம்புங்கள். உங்களைத் தாழ்த்தி கர்த்தரிடத்திலே சேருங்கள். அவர் மன் னித்து இழந்து போனதை திரும்பித் தர தயவுள்ளவராக இருக்கின்றார்.

**ஏசாயா 1:19**

நீங்கள் மனம்பொருந்திச் செவிகொடுத்தால்,தேசத் தின் நன்மையைப் புசிப் பீர்கள்.

**ஜெபம்:** என் எஜமானானகிய என் தேவனாகிய கர்த்தாவே, நான் உம்மை மறந்து உணர்வற்ற வாழ்க்கைக்கு திரும்பாதபடிக்கு, உம் வார்த்தையின் வெளிச்சத்திலே வாழும்படிக்கு என்னை கரம்பிடித்து நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

வெள்ளி | நவம்பர் 8 | 📖 மாலை வாசகம் – சங்கீதம் 107:20

# தேவனுடைய திட்டம் நிறைவேறட்டும்

ஒரு குறிப்பிட்ட ஊரிலுள்ள சனசமூக நிலைமொன்று, நல்ல கொள்கைகள் கோட்பாடுகளோடு, அநேக ஆண்டுகளாக இயங்கி வந்தது. ஏழை எளியவர்களுக்கு உதவி செய்வதும், மதுபானம் போதைவஸ்து போன்ற அடிமைத்தன கட்டுகளிலிருப்பவர்களை விடுதலை செய்வதற்கு வழிவகுப்பதும் அவர்களின் அடிப்படைத் திட்டங்களில் உள்ளடங்கியிருந்தது. நாளுக்குநாள் அந்த சனசமூக நிலையத்தின் திட்டங்கள் விருத்தியடைந்து வந்தது. அந்த ஊருக்கு புதிதாக வந்த மனிதனொருவன், ஊரின் சனசமூக நிலையத்தினால் நடத்தப்படும் உதவித் திட்டங்களுக்கு தன்னிடமிருந்த மிகையான ஐசுவரியத்தினாலே ஆதரவளித்து வந்தான். நாளடைவிலே, அந்த சனசமூக நிலையமானது எந்த அடிமைத்தன கட்டுகளிலிருந்து ஊர் மக்களை விடுதலையாக்க வேண்டும் என்று இயங்கி வந்ததோ, அந்த அடிமைத்தன கட்டுகள் அந்த ஐசுவரியவானுடைய வாழ்க்கையிலிருந்து வந்தது. அது மட்டுமல்லாமல், அவைகளை செய்யும்படிக்கு தன் நண்பர்களையும் அவன் தன் கிரியைகள் வழியாக ஊக்குவித்து வந்ததை அந்த சனசமூக நிலையத்தின் அதிகாரி, அறிந்த போதும், "இந்த வருடம்தானே அவன் எங்களுடைய ஊருக்கு வந்தான், நாங்கள் கொஞ்சக் காலம் பொறுத்திருப்போம்" என்று கூறினார். ஆனால், காலங்கள் கடந்து சென்ற போது, அவர்களில் ஒருவனும் அந்த ஐசு வரியவானோடு அவனுடைய வாழ்க்கை முறைமையைக் குறித்து பேசத் துணியவில்லை. அது நீடிய பொறுமையல்ல, மாறாக அங்கிருந்தவர்களுக்கு அந்த ஐசுவரியவானடைய இரட்சிப்பைவிட அவன் கொடுக்கும் பணமே முக்கியமாக இருந்தது. பிரியமான சகோதர சகோதரிகளே, நம்முடைய எந்தக் கிரியைகளும், செயற்திட்டங்களும், மருகூட்டு தலும் எவரையும் மனந்திரும்புவதற்கோ, இரட்சிப்படைவதற்கோ நடத்துவதில்லை. சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். எனவே, அன்போடு சத்தியத்தை அறிவியுங்கள். (எபே 4:15) சத்தியத்தை அறிந்த ஒருவன், தான் அறிந்த சத்தியத்தை கூறாவிட்டால், அதை அறியாதவன் எப்படித் அறிந்து கொள்வான்? அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? (ரோமர் 8:14). எனவே, விசுவாமார்க்கத்தார், தாங்கள் ஆரம்பித்த செயற்திட்டங்களை நிறைவேற்றுவதைவிட, தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதே இன்றியமையாதது. தேவ வார்த்தையை களங்கமில்லாமல் அறிவித்து, அதை பின்னர் அவர்களுக்காக ஊக்கமாக ஜெபம் செய்யுங்கள்.

**யோவான் 8:32**

**சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்.**

**ஜெபம்**: என் தேவனாகிய கர்த்தாவே, என்னுடைய கிரியைகளல்ல, உம்முடைய வசனமே நித்திய ஜீவனை கொடுக்கின்றது என்பதை அறிந்து உணர்ந்து அதன்படி செயற்பட எனக்கு ஞானமுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# "நல்ல போராட்டம்"

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த வாலிபனொருவன், தேசப்பற்றுள்ளவ னாகவும், ராஜபக்தியுள்ளவனாகவும் இருந்தான். ஒரு நாள் அவன் தன்னுடைய தேசமானது, எதிரிகளால் முற்றுகை போடப்பட்டிருக்கின்றது என்ற செய்தியை கேட்டபோது, தன் தேசத்தை பாதுகாக்கும்படி, தன் னுடைய ராஜாவவிற்கு தான் எப்படியாவது உதவி செய்ய வேண்டும் என்று தன் மனதிலே தீர்மானம் செய்து கொண்டான். போர்வீரர்களைப்போல ஆண்டாண்டு காலமான பயிற்சியும் அனுபவமும் அவனிடம் இருந்ததில்லை. விசேஷ பட்டாளத்திலே இருப்பவர்களைப் போல உடற்பெலனும்அவனுக்குஇருந்தில்லை. ஆனாலும், யுத்த நாட்களிலே, ராஜாவானவரின் படையிலே சேர்ந்து, சில பயிற்சிகளைப் பெற்று, யுத்த வீரர்களின் நலனை விசாரிப்பதற்கும், அவர்களுக்கு வேண்டிய முதலுதவிகளை செய்வதற்கும், தண்ணீர் கொடுப்பதற்கும் தாணையங்களிற்குள் போக்கும் வரத்துமாகவும் அவன் இருந்து வந்தான். ஒரு நாள் நடந்த கடும் போரிலே அவன் படு காயமுற்றதால், மரித்துப் போனான். எதிரிகளுடனான யுத்தம் முடிந்து போகவில்லை ஆனால், அவனோ, தன் குறுகியவாழ்நாட்களிலே விசுவாசமுள்ள ஒரு போர்ச்சேவகனாக நல்ல போராட்டத்தை போராடினான். பிரியமான சகோதர சகோதரிகளே, "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்" (2 தீமோ 4:7) என்று தேவ ஊழியராகிய பவுல் என்பவர் தன்னுடைய கிறிஸ்துவுக்குள்ளான வாழ்க்கையைக் குறித்து கூறியிருக்கின்றார். சில வேளைகளிலே, சில விசுவாசிகள் இந்த வார்த்தை எங்களுக்கு பொருந்தாது. எங்களுக்கோ அப்படியான பெரிதான அழைப்பு இல்லை. எனவே அப்படியான வார்த்தையை அறிக்கை பண்ண நாங்கள் தகுதியற்றவர்கள் என்று சொல்லிக் கொள்கி ன்றார்கள் அல்லது எண்ணிக் கொள்கின்றார்கள். அப்படியாக நீங்கள் சிந்தித்துக் கொண்டிருந்தால், பெலவீனங்களிலே நம்மைப் பூரணப்படு த்தும் தேவ கிருபையிலே பெலப்படுங்கள். (2 தீமோ 2:1) போருக்குசென்றஅந்த வாலிபனானவன், தன் விசுவாசத்திலிருந்து தளர்ந்து போகாமல், தான் பெற்ற பணியை இறுதிவரை செய்து முடித்தான். (ரோமர் 12:3-8) அதுபோலவே, நம்முடைய வாழ்நாட்களிலும், நமக்கு கொடுக்கப்பட்ட பெலத்தின்படி, நாம் பெற்றுக் கொண்ட அழைப்பை நிறைவேற்றும்படிக்கு, விசுவாசத்திலே நிலைத்திருப்போம். விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசு இந்த உலகம் முடியும்வரைக்கும் உங்களோடு இருப்பேன் என்று வாக்குரைத்திருக்கின்றார். (எபி 12:1, மத் 28:20)

**தீமோத்தேயு 6:2**

**விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்தியஜீவனைப் பற்றிக்கொள்;**

**ஜெபம்:** காலைதோறும் புதுக் கிருபையை பொழிகின்ற தேவனே, விசுவாசாத்திலே நிலைத்திருந்து, பெற்ற பணியை நிறைவேற்றி முடிக்க, உம்முடைய கிருபையை எனக்கு தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வெற்றி சிறந்த ஓட்டம்

அவன் நரை மயிரும் பூரண ஆயுசும் உள்ளவனாக, நிறைவான வாழ்க்கை வாழ்ந்து மரித்தான். அவன் பிள்ளைகள் பலத்திருக்கின்றார்கள். அவன் சந்ததி பூமியிலே பெருகியிருக்கின்றது. அவன் பாக்கியவான் என்று சிலருடைய வாழ்க்கையைக் குறித்து ஒரு சில விசுவாசிகள் கூறுவதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். கர்த்தருக்கு பயந்து அவர் வழிகளிலே நடக்கின்றவர்கள் இவ்விதமான வாழ்க்கையை வாழ்வதுண்டு. அதனால், நரை மயிரும் பூரண ஆயுசோடு, பெருகியிருப்பவர்கள் யாவரும் கர்த்தருக்கு பயந்து அவர் வழிகளிலே நடப்பவர்கள் அல்லர். (சங் 73). அதுமட்டுமல்ல, இளவயதிலோ அல்லது பாதி வழியிலோ இவ்வுலகத்தைவிட்டு கடந்து சென்றவர்கள் பாவிகளும், துன்மார்க்கர்களும் அல்லர். அநேகர் கர்த்தருக்காக வாழ்ந்து, அவருக்காக பல பாடுகள், துன்பங்களை சகித்து, பல உபத்திரவங்கள் மத்தியிலும் இறுதிவரை விசுவாசத்தை தளரவிடாமல, உறுதியாய் நிலைத்திருந்து, தங்கள் வாழ்க்கையை வெவ்வேறு வயதுகளிலே முடித்திருக்கின்றார்கள். ஆதாம் ஏவாளுடைய குமாரனாகிய ஆபேல், திருமணம் செய்ததாகவோ, பிள்ளைகள் பெற்றதாகவோ வேதத்திலே குறிப்பிடப்படவில்லை. தேவனாகிய கர்த்தருக்கு பிரியமான வாழ்க்கை வாழ்ந்து வந்த ஆபேல், இளவயதிலேயே அவனுடைய மூத்த சகோதரனாகிய காயீனினால் கொலை செய்யப்பட்டான். குடும்பமும் சந்ததியும் இல்லாமல் மரித்துப் போன அவனைக் குறித்து அவனுடைய காணிக் கைகளைக்குறித்து தேவனே சாட்சிகொடுத்தார் அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான். அவன் விசுவாசத்திலே நிலைத்திருந்ததால், தேவனுக்கு பிரியமான பலிகளை செலுத்தினான் (எபிரெயர் 11:4). எனவே, வயதெல்லைகளையும், பூமியில் ஒருவன் வாழும் வாழ்க்கையின் செழிப்பையும் மையமாக வைத்து, அவன் பாக்கியம் பெற்றவனோ அல்லது நிர்பாக்கியுமுள்ளவனோ என்று தீர்மானித்துக் கொள்வதை நிறுத்தி விடுங்கள். உங்களுக்கு முன்பாக ஓடி வெற்றி சிறந்த அநேக பரிசுத்தவான்களிடத்தில் அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகின்றதென்று மேகம் போன்ற திரளான சாட்சிகள் நமக்கு இருக்கின்றது. அவர்களில் சிலரின் சாட்சியை எபிரெயர் 11ம் அதிகாரத்திலே நாம் காணலாம். கருப்பொருளாவது, ஒருவன் இந்த பூவுலகில் வாழ்ந்த ஆண்டுகளின் எண்ணிக்கை எதுவாக இருந்தாலும், அவன் தன் ஓட்டத்தை முடிக்கும் போது, அவன் விசுவாசத்திலே நிலைத்திருந்தால், அவன் கர்த்தருடைய பார்வையிலே பாக்கியம் பெற்றவனாக இருப்பான்.

**1 பேதுரு 5:9**

**விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்;**

**ஜெபம்**: பரலோக தேவனே, இந்த உலகத்தின் போக்கிலே நான் என் ஆசீர்வாதங்களை அளவிடாமல், விசுவாசத்திலே நிலைத்திருந்து உமக்கு பிரியமான வாழ்க்கை வாழ என்னை கரம் பிடித்து நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வாழ்க்கையை எதிர்நோக்கும் சவால்கள்

ஒரு விசுவாசியானவன், செல்ல செழிப்புடனோ, அல்லது போதும் என்னும் மனதுடனோ, அல்லது வறுமைக் கோட்டிற்குள்ளோ, நீடித்த நாட்களாய் இந்த உலகத்திலே வாழ்ந்திருந்தும், ஆரம்பத்திலே கொண்டிருந்த விசுவாசித்தலே நிலைத்திருந்து பெருகாமல், அதைவிட்டு வழுப்போவானானால் அவன் நீடித்த நாட்களாய் வாழ்ந்ததன் பலன் என்ன? ஒருவேளை, அவனுடைய ஆயுள் நாட்கள் நீடித்திருந்ததினால், ஊரிலுள்ள மனிதர்களால் புகழப்படுவானேயல்லாமல், விசுவாமில்லாமல், தேவனுக்கு பிரியமாக இருக்கமாட்டான். (எபி 11:6) மனுஷகுமாரன் வரும் போது, பூமியிலே விசுவாசத்தை காண்பாரோ என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். (லூக்கா 18:8 நாம் நல்ல போராட்டத்தை போராடுவதற்கு விசுவாசமானது இன்றியமையாததாக இருக்கின்றது. ஒரு போர்வீரனானவன், தன் கேடகத்தை தொலைத்துவிட்டு, போர்க்களத்திற்கு செல்வானாக இருந்தால், அவன் போராடும் போது எதிரிகள் அவனை எளிதில் மேற்கொண்டு விடுவார்கள் அல்லவா. எதிரிகள் இலகுவாக அவனைக் காயப்படுத்தி, சிறைப்பிடித் துக்கொள்வார்கள் அல்லது அவன் எதிரிகளின் கையினாலே சீக்கிர மாக மாண்டு போய்விடுவான். அதுபோலவே, ஒவ்வொரு விசுவாசி க்கும் ஆவிக்குரிய போராட்டம் உண்டு. (எபே 6:12) அவன் ஆண்டவர் இயேசு வழியாக இரட்சிப்பை அடைந்த பின்பு, ஒரு நாள் மட்டுமே இந்தப் பூமியிலே வாழ்ந்தாலும், அல்லது மேலும் எண்பது வருடங்கள் வாழந்தாலும், இந்த உலகத்திலே வாழும்வரைக்கும் அவனுடைய வாழ்க்கையிலே ஆவிக்குரிய போராட்டத்தை தவிர்த்துக் கொள்ள முடியாது. தனக்கு போராட்டம் இல்லை என்று கூறுபவன், தன் விசுவாசமாகிய கேடகம் இல்லாமல் போர்க்களத்திற்கு சென்ற போர்வீரனுக்கு ஒத்தவனாக இந்த பூமியிலே வாழ்கின்றவனாக இருப்பான். அவன் சபையோர், உற்றார் உறவினர், நண்பர்கள், சகவேலையாட்கள் மத்தியிலே விசுவாசி என்ற பெயரை தரித்தவனாக இருந்தாலும், அவன் ஆவிக்குரிய வாழ்க்கையிலே பெலவீனப்பட்டு, ஆவிக்குரிய நோய் கொண்டவனாகவும், அடிமைத்தனங்களினால் ஆவிக்குரிய வாழ்க்கையிலே செத்துப் போனவனுமாக மாறிவிடுகின்றான். எனவே, எல்லா சூழ்நிலைகளிலும் ஆண்டவர் இயேசுவிலே நிலத்திருந்து வாழுங்கள். போர்க்களத்திலே போர் செய்யும் நல்ல போர்வீரனைப் போல விசுவாசம் என்னும் கேடகத்தை அனுதினமும் உயர்த்திப் பிடித்தவர்களாக முன்செல்வோமாக.

**எபேசியர் 6:16**

**எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள்.**

**ஜெபம்:** இந்த உலகிலே வெற்றி வாழ்க்கை வாழ என்னை அழைத்த தேவனே, நாம் ஒருபோதும் உம்மேல் கொண்ட விசுவாசத்தைவிட்டு தளர்ந்து போய்விடாதபடிக்கு எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்ச கர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வார்த்தையிலே நிலைத்திருங்கள்

எப்படியாக விசுவாசத்திலே நிலைத்திருந்து வளர்வது என்பதைக் குறித்து இந்த நாட்களிலே தியானம் செய்வோம். ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த பண்ணை உரிமையாளரொருவருக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். மூத்தவன் தன் தந்தையாருக்கு உண்மையுள்ளவனாக இருந்தான். அனுதினமும் அவர் சொல்லும் ஆலோசனைகளை கேட்டு, அவருடைய வார்த்தைகளை நம்பி, அதன்படி செயற்பட்டு வந்தான். அவனுக்கும் அவன் தந்தைக்கும் இடையிலேயுள்ள உறவு வளர்ந்து கொண்டே இருந்தது. அதனால் தன் தந்தைக்கு பிரியமுள்ள பிள்ளையும், விசுவாசமுள்ள வேலைக்காரனுமாக இருந்து வந்தான். இளையவனோ, தந்தை யாரிடமிருந்து கற்றுக் கொள்வதை விட ஊரிலே படித்துப் பட்டம் பெற் றவர்களிடமிருந்து கற்றுக் கொள்வோம் என்று ஊடகங்களிலும், பத்திரி கைகளிலும், புத்தகங்களிலிமிருந்தும் கற்றுக் கொள்ள ஆரம்பித்தான். அந்த செய்திகளையும் ஆலோசனைகளையும் பிரசுரித்தவர்கள், தங்க ளை பின்பற்றும் வாடிக்கையாளர்கள் எதைக் கேட்க விரும்பினார்களோ, அவைகளையே அதிகமாக பிரசுரித்து வந்தார்கள். அவன் கற்றுக் கொண்டவைகளால் அவன் சிந்தை நிரம்பிற்று. நாளடைவிலே, இளைய குமாரனானவன், தன் தந்தையார் பேசும் வார்த்தைகளையும், ஆலோசனைகளையும் அற்பமாக எடுத்துக் கொள்ள ஆரம்பித்தான். அதனால் அவனுக்கும் தந்தையாருக்கும் இடையிலான உறவு மங்கி, அவரைக்குறித்த விசுவாசம் தணிய ஆரம்பித்தது. பலவிதமான காரியங்கள் அவன் மனதிலே இருந்ததால், அவன் கவனிக்க வேண்டிய காரியங்களைவிட்டுவிட்டு, அநேக காரியங்களைக் குறித்து அலட்டிக் கொள்கின்றவனாக மாறிவிட்டான். பிரியமானவர்களே, விசுவாசமானது வார்த்தைகளை கேட்பதினாலே உண்டாகின்றது. இந்நாட்களிலே நீங்கள் எதைக் கேட்கின்றீர்கள்? தியானத்தோடு நாளை ஆரம்பித்து, நீங்கள் செய்ய வேண்டிய உங்கள் நாளாந்த அலுவல்களை முடித்த பின்பு, எதை ஆர்வமாக எந்நேரமும் கேட்பற்கு அல்லது ஊடகங்கள் வழியாக பார்ப்பதற்கு ஆயத்தமாக இருக்கின்றீர்கள்? அவைகளை குறித்த காரியங்களே உங்களில் பெருக ஆரம்பிக்கும். உலக காரியங்களையும் நாடித் தேடுபவனுடைய வாழ்க்கை யிலே தேவனுடைய வார்த்தையைக் குறித்த சந்தேகமும், வாழ்க்கையைக் குறித்த பயமும் பெருக ஆரம்பிக்கும். தேவனுடைய வார்த்தையை அனுதினமும் ஆர்வத்துடன் கேட்பவன், ஜீவனுள்ள ஆகாரத்தை உட்கொள்வதால் அவன், விசுவாசத்திலே நிலைத்திருந்து, தேவனுக்குள் வளர்ந்து பெருகுவான்.

**ரோமர் 10:17**

**ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும்,**

**ஜெபம்**: அன்பின் தேவனே, இந்த உலகத்தின் காரியங்களின் என் மனம் சோர்ந்து போகாதபடிக்கு, உம்முடைய வார்த்தையை பற்றிக் கொண்டு, அதில் தியானமாக இருக்கும்படிக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து வழிநடத்திசெல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

புதன் | நவம்பர் 13

📖 மாலை வாசகம் – யோவான் 15:1 – 5

# உங்கள் நாளாந்த பேச்சுக்கள்

ஒரு அயலிலே இருந்த இரண்டு குடும்பங்கள், பொருளாதார நெருக்க டிகள் மத்தியிலே, மாதந்தம் கிடைக்கும் ஊதியத்திலே வாழ்ந்து வந்தார் கள். ஊரிலே கள்வர்களினால் உண்டாகும் தொல்லைகளும், வன்முறை களும் ஒவ்வொரு ஆண்டிலும் பெருகிக் கொண்டே சென்றது. அப்ப டிப்பட்ட துர்செய்திகளை அவர்கள் கேட்கும் போது, முதலாவது குடும்ப த்தின் தந்தையானவர்: அவருடைய வார்த்தையின்படி தேசத்திற்காகவும், ஆளுகின்ற வர்க ளுக்காவும் நாங்கள் வேண்டுதல் செய்வோம். இதுவரை நம்மைக் காத்த ஆண்டவர் இயேசு, நம்மை தொடர்ந்தும் நடத்து வார் என்பதற்கொத்த வேத வார்த்தைகளை பிள்ளைகள் முன்நிலையிலே அறிக்கை செய்து வந்தார்கள். நாட்கள் கடந்து சென்றதும் அவர்கள் பிள்ளைகளும் அவ்வண்ணமாகவே பேசுவதற்கும், கிரியைகளை நடப்பிப்பதற்கும் பழக்கிக் கொண்டார்கள். நாங்கள் திறப்பின் வாசலிலே நின்று தேசத்திற்காக ஜெபிக்கின்றவர்கள் என்ற தேசத்தைக் குறித்த பாரம் அவர்க ளில் பெருகிற்று. இரண்டாவது குடும்பத்தினரின் தந்தையாரானவர்: செய்திகளை கேளு ங்கள், நாட்டின் பொருளாதார நிலைமையைப் பாருங்கள். இந்த தேசம் உருப்படாது, இந்த ஊர் சரிவராது என்று தேசத்தைக் குறித்தும், ஆளுகைகளைக் குறித்தும் பிள்ளைகள் முன் நிலையிலே பேசி வந்தார்கள். நாளடைவிலே அவர்களுடைய பேச்சும், கிரியைகளும் தேசத்திற்கும் ஆளுகைக்கும் எதிரானதாகவும், கசப்புள்ளதாகவும் மாறி விட்டது. பிள்ளைகள் எதை பேசக் கேட்டார்களோ, எதை பார்த்து வந்தார்களோ, அவைகளால் அவர்களுடைய சிந்தை நிரப்பப்பட்டது. பிரியமானவர்களே, இந்த உலகத்திலே வாழும் நாங்கள், கடை தெருவிற்கு சென்று சில காரியங்களை செய்து வர வேண்டும். அதன்படி சில செய் திகளையும், கருத்து க்களையும் அறிய வேண்டி தேவை உண்டு. அவை தேவைக்கேற்றபடி மட்டாக இருக்கட்டும். அவைகளினாலே ஜெயம் அல்ல பயமே வளரும். தேவனுடைய வார்த்தைகளோ, ஜீவனுள்ளவைகள். அவைகளை, வாசித்து, கேட்டு, தியானம் செய்து, கைகொள்கின்றவர்களுக்கு மிகுந்த பலன் உண்டு. இந்த உலகத்தை ஜெயித்த வார்த்தையானவராகிய இயேசுவிலே அவர்கள் நிலை கொண்டிருப்பதால், அவர்கள் விசுவாசத்திலே உறுதியாய் நிலைத்திருந்து, விசுவாசத்திற்குரிய வார்த்தைகளையே அறிக்கைசெய்வதால், இந்த உலகம் அவர்களைமேற்கொள்ள முடியாது.

**உபாகமம் 6:7**

**நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளு கிறபோதும், எழுந்திருக்கிற போதும் அவைகளைக் குறித்துப் பேசி,**

**ஜெபம்**: ஜீவன் தரும் திருவார்த்தைகளை எனக்கு தந்த தேவனே, அவைகளின் மேன்மையைக் குறித்த உணர்வை நான் இழந்து போகாதபடிக்கு, இந்த உலக போகிலிருந்து என்னை விலக்கி காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# "உங்கள் கலந்துரையாடல்கள்"

குடும்பமாக கூடிவரும் போது நீங்கள் பொதுவாக பேசிக் கொள்ளும் காரியங்கள் என்ன? நீங்கள் நண்பர்களாக கூடிவரும் போது எதைக் குறித்து அதிகமாக பேசிக் கொள்கின்றீர்கள்? உற்றார் உறவினரை சந்திக்கும் போது எதை ஆர்வாக பேசுகின்றீர்கள்? இப்படியாக சக ஊழியர்களை சந்திக்கும் போது, விசுவாசிகளை காணும் போது எதைக் குறித்து கலந்தாலோசிக்கின்றீர்கள்? சற்று தரித்திருந்து சிந்தித்துப் பாருங்கள். அரசியலைக் குறித்து பேசுகின்றவர்கள் அதைக் குறித்த அறிவிலே வளருகின்றார்கள். விளையாட்டுக்களை குறித்து பேசுகின்றவர்கள், அவைகளினாலே தங்கள் மனதை நிறைத்துக் கொள்கின்றார்கள். குறைகளை குறித்தே பேசுகின்றவர்கள் குறைகளிலே பாண்டித்தியம் பெறுகின்றார்கள். இப்படியாக விசுவாசிகள் எதைக் குறித்து பேசுகின்றார்களோ, அவைகளினாலே நிரப்பப்படுகின்றார்கள். பிரியமான சகோதர சகோதரிகளே, கோணலும் மாறுபாடானதுமான சந்ததியின் நடுவிலே நாம் வாழ்ந்து வருகின்றோம். சவால்களும், கலகங்களும், வன்முறைகளும், குறைகளும் எங்கும் மலிந்து கொண்டே போகின்றது. நல்ல செய்திகளை கேள்விப்படுவது அரிதாகவே இருக்கின்றது. ஆனால், தேவனுடைய வார்த்தை கூறுவது என்ன? சம்பூரணமான சூழ்நிலையிலே, வேத வார்த்தைகளை தியானிப்பவன், காலத்திலே தப்பாமல் தன் கனியை கொடுப்பான் என்று கூறுகின்றதா? அப்படியாகயல்ல. சூழ்நிலைகள் எப்படியாக இருந்தாலும், துன்மார்க்கர் பெருகியிருந்தாலும், பரிகாசக்காரர் சூழ்திருந்தாலும், பாவிகள் பெலத்திருந்தாலும், எவை எப்படியாக இருந்தாலும், "கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப்போலிருப்பான் அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்." மழைத்தாழ்சியான நாட்களிலும், வெப்பம் அதிமாக நாட்களிலும் அவன் பலன் கொடுகின்றவனாகவே இருப்பான். எனவே, நீங்கள் எதை கேட்கின்றீர்கள் என்றும், தேவனுடைய வார்த்தையை கேட்கின்ற விதத்தைக் குறித்தும் எச்சரிக்கையுள்ளவர்களாக இருங்கள். தேவ னுடைய வார்த்தைகள் பக்திவிருத்திக்கு ஏதுவானவைகள். அவைகளினாலே விசுவாசக் கண்கள் திறக்கப்படுகின்றது. எனவே நீங்கள் அதையே பேசி, தியானித்து, கலந்துரையாடுகின்றவர்களாக இருங்கள்.

**சங்கீதம் 1:2**

**கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.**

**ஜெபம்:** நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, நான் எப்போதும் உம்முடைய வார்த்தையை கேட்பதிலும், தியானிப்பதிலும், கைகொள்வதிலும் வளரும்படிக்கு எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நம் இயேசு எக்காலமும் மாறாதவர்

இந்த உலகிலே வாழும் விசுவாசிகள் தங்கள் வாழ்க்கையிலே வெவ்வேறான காலங்களையும் பருவங்களையும் கடந்து செல்கின்றார்கள். கண்ணீரோடு விதைக்கின்ற காலமுண்டு. கெம்பீரத்தோடு அறுகின்ற காலமுண்டு. குழந்தை பிறக்கும் நாளை மகிழ்ச்சியோடு கொண்டாடுகின்றோம். அன்புள்ளவர்கள் மரிக்கும் போது துக்க நாட்களை அனுசரிக்கின்றோம். வியாபாரம் எழுச்சி காணும் காலமுண்டு. வியாபாரம் நட்டத்தை எதிர்நோக்கும் நாட்களை சந்திக்கின்றோம். சக விசுவாசிகள் எங்களை புகந்ழ்து பேசுகின்ற நேரம் உண்டு. சில வேளைகளிலே, ஆகாத சம்பாஷனைகளினால் மனவேதனை அடைந்துகொள்ளும் நேரமும் உண்டு. சுகதேசிகயாக வாழும் நாட்கள் உண்டு. நோய்வாய்ப்பட்டு கட்டிலிலே இருக்கும் காலங்களும் உண்டு. வாயிறாற உண்ணும் நாட்கள் உண்டு. பட்டினி கிடக்க வேண்டிய நேரங்களையும் நாம் சந்திக்கின்றோம். நன்மை பெற்றவர்கள் தீமை செய்யும் நாட்கள் உண்டு. நன்மை செய்தவர்கள் நன்றியதலுள்ளவர்களாய் இருக்கும் காலமும் உண்டு. சீராய் நடக்கும் நாட்கள் உண்டு. பாவங்கள் செய்து ஒடுங்கிப் போயிருக்கும் காலங்க ளும் உண்டு. இப்படியாக காலங்களையும் பருவங்களையும் நீங்கள எதிர்நோக்கும் போது, நம்முடைய வாயிலிருந்து பிறக்கும் வார்த்தைகள் என்ன? மற்றவர்கள் என்ன செய்வார்கள் என்று வாயினால் அறிக்கை செய்யாவிடினும் உங்கள் இருதயத்தில் தோன்றும் எண்ணங்கள் என்ன? இரண்டு வகையான அறிக்கையே விசுவாச மார்க்கத்தாரின் வாயிலிருந்து புறப்படுவதை அவதானிக்க முடியம். தேவனுக்குரியவைகள் அல்லது இந்த உலகத்திற்குரியவைகள். விசுவாசத்துக்குரியவைகள் அல்லது அவிசுவாசத்திற்குரியவைகள். அதாவது, நாம் எல்லா கடினமான சூழ்நிலைகளிலும் எனக்கு ஒன்றும் நடக்கவில்லை, நான் நன் றாகவே இருக்கின்றேன் என்று அறிக்கை செய்ய வேண்டும் என்பது பொருளல்ல. நடந்த சம்பவங்களால், ஒருவேளை நம் இருதயத்தில் பயம், திகில், துக்கம், துயரம், வேதனை போன்ற உணர்வுகள் உண்டாயிருக்கலாம். அந்த வேளையிலே, நம்முடைய உண்மையான நிலைமையை உள்ளபடி நம் தேவனாகிய கர்த்தரிடம் கூறி, எல்லா காலங்களிலும், பருவங்களிலும், என் ஆத்துமாவே, தேவனையே நோக்கி அமர்ந்திரு. நான் நம்புகிறது அவராலே வரும் என்று அவருடைய ஆளுகையை அறிக்கை செய்கின்றவர்களாக இருக்க வேண்டும்.

**சங்கீதம் 62:8**

**ஜனங்களே, எக்காலத்திலும் அவரை நம்புங்கள்; அவர் சமுகத்தில் உங்கள் இருதயத்தை ஊற்றிவிடுங்கள்; தேவன் நமக்கு அடைக்கலமாயிருக்கிறார்.**

**ஜெபம்:** என் கன்மலையும், என் இரட்சிப்பும், என் உயர்ந்த அடைக்கலமுமான தேவனே, எக்காலத்திலும், எந்த சூழ்நிலையிலும், அவிசுவாசத்திற்குரிய வார்த்தைகளை அறிக்கை செய்யாதிருக்க என்னை பெலப்படுத்தி நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சிந்தையை வார்த்தையினால் நிரப்புங்கள்

ஒரு சமயம், ஆண்டவராகிய இயேசு ஒலிவமலையின்மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்து வந்து: உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன என்று கேட்டார்கள். அதற்கு அவர் மறுமொழியாக: "யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள் கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள் என்றும் அது முடிவு அல்ல, இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம் என்று இறுதி நாட்களின் சில அடையாளங்களைக் குறித்து கூறினார். அவர் தம்முடைய திருப்பணியை இந்த பூமியிலே நிறைவேற்றி, மனித குலத்தின் பாவங்களை தன்மேல் ஏற்றுக் கொண்டு, அதை பரிகரித்து, மரித்து, மரணத்தை வென்று மூன்றாம் நாள் உயிர்ந்தெழுந்து, பரலோகத்திற்கு சென்ற பின்னர், தம்முடைய சீஷனாகிய யோவானுக்கு இனி சம்பவிக்க போகின்றவைகளை குறித்து வெளிப்படுத்தினார். இந்த நாட்களிலே விசுவாசிகள், யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவது மட்டுமல்ல, வேதத்தை வாசித்து, தியானித்து, ஜெபித்து, தாங்கள் செய்ய வேண்டிய நாளாந்த அலுவல்களை சீக்கிரமாக செய்து முடித்து. தங்கள் ஓய்வு நேரங்க ளிலே, அதிகதிகமாக உலகச் செய்திகளையும், அரசியல்களையும், நாட்டு நடப்புக்களையும், உலகம் போகும் போக்கையும் செய்திகள் ஊடகங்கள் வாயிலாக கேட்டு, தங்கள் சிந்தைகளை அவைகளிளாலே நிரப்பிக் கொண்டு, அவைகளையே சக விசுவாசிகளுடனும் கூட அதிகதி கமாக பேசிக் கொள்கின்றார்கள். செய்திகளை கேட்டு, உலகத்தின் போக்குகளை அறிந்து கொள்வது பாவமா என்று கேட்டு கலகங்களை ஏற்படுத்திக் கொள்ளாமலும், உங்கள் இருதயத்தையும் சிந்தைகளையும் அவைகளால் நிரப்பிக் கொள்ளாதபடிக்கு எச்சரிக்கையுள்ளவராக இருங்கள். பக்திவிருத்தியானது தேவ வார்த்தைகளால் உண்டாகின்றது. உலகத்திலுள்ளவைகளால் கவலைகளும், மயக்கங்களும், பயங்களுமே உண்டாகின்றது. பானையிலுள்ளதுதான் அகப்பையில் வரும் என்பது போல, ஒரு விசுவாசி தன் இருதயத்தை எவைகளால் நிரப்பி கொள்கின்றானோ, அவைகளையே அவன் வாயானது அறிக்கை செய்யும். எனவே, நீங்கள் விசுவாசத்திலே நிலைத்திருக்கும் பொருட்டு, தேவனுடைய வார்த்தைகளையே அதிகதிமாகத் தியானியுங்கள். அப்படி செய்வதினால் நீங்கள் ஞானமுள்ளவர்களாய் நடந்து கொள்வீர்கள்.

**எபேசியர் 5:19**

**சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக்கொண்டு,**

**ஜெபம்**: சகலமும் அறிந்த தேவனே, நான் மதியற்றவனைப் போல இராமல், உம்முடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து, என் வாழ்நாட்களை பிரயோஜனப்படுத்திக் கொள்ள எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வழுவிப்போக வைக்கும் ஐக்கியங்கள்

ஒரு பெற்றோரானவர் தாம் அன்பு காட்டி அரவணைத்து வளர்த்து வந்த தங்களுடைய மகனானவன், பொதுவான எல்லா விஷயங்களிலும் மிக வும் ஒழுக்கமுள்ளவனாக இருந்து வந்ததினால் மகிழ்ச்சியடைந்தார்கள். ஆனாலும், வாலிப வயது வந்ததும், அவனுடைய நண்பர்களில் சிலரின் போக்கை அறிந்து கொண்ட பெற்றோரானவர், தங்கள் மகனானவனு டைய வாழ்க்கையை குறித்து மிகவும் கரிசனையுள்ளவர்களானார்கள். கல்வி, வேலை, ஒழுக்கம் மற்றும் பெரியோரை கனம் பண்ணு தல், மதுபான குடிவெறி இவையொன்றும் அவன் வாழ்க்கையி லே இல்லாதிருந்தபோதும், ஏன் அவர் கள் அந்த ஒரு காரியத்தைக் குறித்து மிகவும் கரிசனையுள்ளவர்களானார்கள்? தாமதமின்றி அவர்கள் தங்கள் மகனான வனை அழைத்து, அன்போடு அவனு க்கு அறிவுரை கூறினார்கள். அவனோ, அவர்களை நோக்கி: இப்போது எனக்கு இருபத்தைந்து வயதாகிவிட்டது. எல்லா காரியங்களிலும் நான் உங்க ளின் சொற்படியே நடந்து வருகின்றேன். நண்பர்கள் என்னுடைய தனிப்பட்ட விஷயம், அதிலே தலையிட வேண்டாம் என்று கூறினான். அதை கேட்ட பெற்றோரானவர்கள் மனவேதனை அடைந்தார்கள். இத் தனை யாண்டுகளாக நெறிமுறையுடன் வாழ்ந்து வந்த தங்கள் மகனா னவன், தவறான நண்பர்களால் வழிவிலகிச் சென்று, வாழ்க்கையிலே பின்னடைவுகளையும், ஒருவேளை திரும்ப முடியாத குற்றங்களுக்கு ஆளாகிவிடுவானோ என்ற மனப்போராட்டங்களுக்குமுள்ளானார்கள். இவ் வண்ண மாகவே, நித்திய ஜீவனுக்கென்று அழைப்பை பெற்ற விசுவாசி களும், பொதுவாக எல்லா பாரங்களையும் இறக்கி வைத்து, பாவத்தி ற்கு வழி வகுக்கும் பாதைகளை விட்டுவிடுகின்றார்கள். ஆனால், பழைய வாழ்க்கையின் ஞாபகத்திற்காக, உலக வாழ்க்கையோடு ஐக்கியமாக இருக்கும்படிக்கு ஒரு சிறிய ஒற்றயடி பாதையை மனதிலே வைத்துக் பாதுகாத்துக் கொள்கின்றார்கள். அதைக் குறித்து யாராவது ஆலோச னைகள் கூறினால், அது தங்கள் தனிப்பட்ட வாழ்க்கை, அதிலே தலை யிவதற்கு சபைக்கோ சங்கத்திற்கோ அனுமதியில்லை என்று கூறிக் கொள் வார்கள். இப்படியாக சில விசுவாசமார்க்கத்தார், உலகத்தின் நட்புக்க ளால், தாங்கள் உறுதியாய் பற்றிக் கொண்ட விசுவாசத்தைவிட்டு வழு விப்போய், தங்களுக்கும், தங்கள் குடும்பதிற்கும், சரீரமாகிய சபைக்கும் வேதனைகளையும், நோவுகளை ஏற்படுத்திக் கொள்கின்றார்கள்.

**சங்கீதம் 139:24**

**வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண் டோ என்று பார்த்து, நித் திய வழியிலே என்னை நடத்தும்.**

**ஜெபம்**: என் உள்ளந்தரியங்களை ஆராய்ந்தறிகின்ற தேவனே, நான் கேட்ட சுவிசேஷத்தினால் உண்டான நம்பிக்கையைவிட்டு அசையாமல், ஸ்த்திரமாயும் உறுதியாயும் விசுவாசத்திலேநிலைத்திருக்க கிருபை செய் வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

திங்கள்| நவம்பர் 18 | 📖 மாலை வாசகம் – 1 தீமோ 6:17–21

# எல்லாத் தீமைக்கும் வேர்

ஒரு சமயம், தலைவன் ஒருவன் ஆண்டவர் இயேசுவை நோக்கி: நல்ல போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்வதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர்: விபச்சாரஞ் செய்யா திருப்பாயாக, கொலைசெய்யாதிருப்பாயாக, களவுசெய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, உன் தகப்பனையும் உன் தாயை யும் கனம்பண்ணுவாயாக என்கிற கற்பனைகளை நீ அறிந்திருக்கிறாயே என்றார். அதற்கு அந்த தலைவன்: இவைகளையெல்லாம்என்சிறு வய துமுதல் கைக்கொண்டிருக்கிறேன் என்றான். இயேசு அவனைப் பார் த்து, அவனிடத்தில் அன்புகூர்ந்து: உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு: நீ போய், உனக்கு உண்டானவை களையெல்லாம் விற்று, தரித்திரரு க்குக் கொடு, அப்பொழுது பரலோ கத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும் பின்பு சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றிவா என்றார். அவன் மிகுந்த ஆஸ் தியுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்டு, மனமடிந்து, துக்கத்தோடே போய்விட்டான். பிரியமான சகோதர சகோதரிகளே, பாரு ங்கள், அந்த தலைவனானவன், சிறு வயதிலிருந்து கற்பனைகள் யாவை யும் கைகொண்டு வந்தான். ஆனாலும், அவன் தேவன்மேல் விசு வாசம் வைக்கக்கூடாதபடிக்கு, பொருளாசையானது அவனுக்குள் இருந் தது. தன்னைஅழைக்கின்றவர் இன்னார் என்றும், அந்த அழைப்பின் மேன் மை எப்படிப்பட்டது என்றும் உணர்ந்து கொள்ளாதபடிக்கு அவன் இரு தயம் உலக ஐசுவரியத்தின் ஆசையினாலே கட்டப்பட்டிருந்தது. ஆதி அப்போஸ்தலரின் நாட்களிலும் பொருளாசையினால், இழுப்புண்டு, அநேகர் தங்கள் விசுவாச கப்பலை சேதப்படுத்தினார்கள். இன்றும் அத் தகைய உபதேசங்களை சிலர் பின்பற்றி, தாங்கள் அதற்குள் அகப்பட் டதை உணராமலும், தங்கள் சுயஇலாபத்திற்காக தங்களோடு அநே கரை வசப்படுத்திக் கொள்ளும்படி உலக ஐசுவரியம் தேவனால் உண் டான பொக்கிஷம் என்று உபதேசிக்கின்றார்கள். ஆனால் நீங்களோ, "அந்த உபதேசத்திற்கு செவி கொடுக்காமல், நன்மை செய்யவும், நற்கி ரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்க ளும், உதாரகுணமுள்ளவர்களுமாயிருக்கவும், நித்திய ஜீவனைப் பற்றி க்கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் உங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைத்துக் கொள்ளும்படி நாடுங்கள்.

**1 தீமோத்தேயு 6:10**

**சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள்.**

**ஜெபம்**: மேலானவைகளை தேடும்படி என்னை அழைத்த தேவனே, எல் லாத் தீமைக்கும் வேராயிருக்கின்ற பண ஆசைக்குள் நான் இழுப்புண்டு போகாதபடிக்கு, போதுமென்கின்ற மனதை தந்து என்னை வழிநடத்தி செல்வீராக. இரட் சகர்இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உலக ஞானமும் தெய்வீக ஞானமும்

அப்பா, நீங்கள் அக்காலத்திலே பட்டணத்தில் படித்து பட்டம் பெற்று, பின்னர் இங்கே வந்து உங்கள் வாழ்க்கையை ஒழுங்காக வாழ்ந்து, நீங்கள் கையிட்டு செய்த காரியங்களிலே வெற்றிபெற்றது உண்மை. ஆனால், இது ஒரு சிறிய கிராமம். உலகத்திலே நாகரீகம் நிறைந்த மகா பெரிய நகரங்கள் உண்டு. உங்கள் கொள்கை கோட்பாடுகள் ஒன்றும் அங்கே செல்லுபடியா காது. கற்றுக் கொள்ளுவதற்கு அநேக காரியங்கள் உண்டு என்று கலாநிதி பட்டப்படிப்பை முடித்துக் கொண்ட மகனானவன், தன் தகப்பனானவரிடம் கூறினான். அதற்கு தகப்பனானவர்: மகனே, நான் சொல்வதை கவனமாக கேள். என்னுடைய பட்டமும் படிப்பும் எனக்கு வெற்றியைத் தரவில்லை. உலக கல்வி ஏதும் இல்லாத என்னுடைய தந்தையானர் எனக்கு கற்றுத் கொடுத்தபடி, என் வழியை கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிருந்தேன். அவர் என் காரியங்களை வாய்க்கச் செய்தார். கர்த்தர் அன்றும் இன்றும் என்றும் மாறாதவர். யாரும் அறியாத குக்கிராமமாக இருந்தாலும், வானபரியந்தம் உயர்த்தப்பட்ட மகா பெரிய நகரமாக இருந்தாலும், கர்த்தரையல்லாமல் சமாதானம் தரும் வெற்றி வாழ்வு இல்லை என்பதை நீ மறந்து போய் விடாதே என்று தன் தந்தையானவர் தனக்கு கூறியது போல தன் மகனானவனுக்கு தயவாக ஆலோசனை கூறினார். ஆம், பிரியமான சகோதர சகோதரிகளே, இந்த உலகத்தில் ஞானம் என்று பெயர் பெற்றிருப்பவைகள், விசுவாசிகளை விசுவாசத்தினின்று வழுவிப்போக பண்ணிவிடும். ஆதலால், எச்சரிக்கையுள்ளவர்களாக இருங்கள். “சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது. அந்தப்படி: ஞானிகளுடைய ஞானத்தை நான் அழித்து, புத்திசாலிகளுடைய புத்தியை அவமாக்குவேன் என்று எழுதியிருக்கிறது. ஞானி எங்கே? வேதபாரகன் எங்கே? இப்பிரபஞ்சத் தர்க்கசாஸ்திரி எங்கே? இவ்வுலகத்தின் ஞானத்தை தேவன் பைத்தியமாக்கவில்லையா?எப்படியெனில், தேவஞானத்துக்கேற்றபடி உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிக்கிறவர்களை இரட்சிக்க தேவனுக்குப் பிரியமாயிற்று. எனவே, உலக ஞானத்தில் அல்ல விசுவாசத்திலே நிலைத்திருங்கள்.

**1 கொரிந்தியர் 1:21**

பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிக்கிறவர்களை இரட்சிக்க தேவனுக்குப் பிரியமாயிற்று.

**ஜெபம்**: சகலமும் அறிந்த தேவனே, இந்த உலக்திலே ஞானம் என்று பெயர் பெற்றவைகளால் நான் இழுப்புண்டு என் விசுவாசத்தினின்று வழுவிப்போய்விடாதபடிக்கு என்னை பெலப்படுத்தி வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# “அனுதின தியானம்”

விசுவாச மார்க்கத்தார் விசுவாசித்தினின்று விலகிப் போகக்கூடிய வழிகளை குறித்த நாம் தியானித்து வருகின்றோம். “இது எங்களுக்கு தெரியும், பலமுறை கேள்விப்பட்டிருக்கின்றோம். எனவே, விசுவாசத்தை விட்டு வழுவிப்போவதற்கேதுவாக தற்போது என்னிடம் இருக்கின்ற பிரச்சனைகளை பராமுகமாக விட்டு விட்டு, அடுத்த பாடத்திற்கு கடந்து செல்வோம். அநேக செயற்திட்டங்களை செய்ய வேண்டும். தேவனுக்காக ஏதவாது செய்ய வேண்டும். வேதத்தை ஆழமாக கற்றுக் கொள்ள வேண்டும்” என்று ஒரு விசுவாசியானவன் எண்ணுவானாக யிருந்தால், அவன் தனது கிரியைகளால் மனிதர்களுக்கு முன்பாக தன்னை நீதிமானாக காண்பிக்கின்றவாக இருப்பானேயல்லாமல், தேவனுக்கு பிரியமுள்ளவாக இருக்கமாட்டான். எனவே, நம்முடைய ஆண்டவராகிய இயேசு திரும்பவும் வரும்போது, விசுவாசத்திலே நிலைத்திருக்கின்றவர்களாக காணும்பொருட்டு, மிகுந்த ஜாக்கிரதையுள்ளவர்களாக நாம் நடந்து கொள்ள வேண்டும். அதாவது, பயந்து, திகில் கொண்டு, கர்த்தரை சேவிப்பது என்பது பொருளல்ல. விசுவாசத்தைவிட்டு நம்மை விலகிப் போகச் செய்யும், பிசாசானவனின் வஞ்சகங்களை நாம் இனங்கண்டு, அவைகளை இயேசுவின் நாமத்திலே மேற்கொள்ளுகின்றவர்களாக அனுதினமும் வாழ வேண்டும். நாம் வெற்றியுள்ள வாழ்க்கை வாழ்வதற்கு தேவையான யாவற்றையும் ஆண்டவராகிய இயேசு நமக்கு கற்பித்து காண்பித்திருக்கின்றார். நீங்கள் அனுதினமும், ஒரு குறித்த நேரத்திலே, தேவனுடைய பாதத்திலே அமர்ந்து வேதத்தை வாசித்து, தியானிக்கின்றீர்களா? நாம் யாவரும் சபைக்கு சென்று கூடி ஜெபித்து, துதித்து, வேத வார்த்தைகளை கேட்கின்றோம். சிலர் குடும்பமாக சேர்ந்து, வேதத்தை தியானித்து, ஜெபிக்கின்றார்கள். அவைகள் யாவும், நன்மையானதும், அவசியமானதுமானதுமாக இருக்கின்றதால், அவைகளை தொடர்ந்து செய்யுங்கள். ஆனால், நீங்கள், தனியாக, தேவனுடைய பாதத்திலே அமர்ந்து, வேதத்தை தியானித்து, ஒரு பிள்ளையானவன் தன் தகப்பனானவரோடு எப்படி பேசுகின்றானோ, அதைப் போல தேவனோடு பேசவேண்டும். உங்கள் வாழ்க்கையில் நடந்த மற்றும் நடக்கின்ற சம்பவங்களை வேத வார்த்தையின் வெளிச்சத்திலே தியானிக்க வேண்டும். அதை கருத்தோடு செய்து வருகின்றவர்கள் இடறிவிழுவதில்லை. விசுவாசத்தைவிட்டு வழுவிப் போவதில்லை. அவர்கள் வாழ்வில் தேவ சமாதானம் நிலைத்திருக்கும்.

**சங்கீதம் 119:165**

**உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்குமிகுந்த சமாதானமுண்டு; அவர்களுக்கு இடறலில்லை.**

**ஜெபம்:** ஜீவன் தரும் வார்த்தைகளை எனக்கு தந்த தேவனே, நீர் என்னுடைய வாழ்க்கையைக் குறித்து என்னோடு பேசும் போது, நான் அதை பாரா முகமாக விட்டுவிடாதபடிக்கு, உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்துவீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தன் பிழைகளை உணருகிறவன் யார்?

மோசேயானவனின் வாழ்க்கையைக் குறித்து பேசுங்கள். ஆண்டவராகிய இயேசுவின் வாழ்க்கையைக் குறித்து பேசுங்கள். ஆனால், என்னைப் பற்றியோ என் குடும்பத்தை பற்றியோ பேசுவதை விட்டுவிடுங்கள் என்று ஒரு விசுவாசியானவன், உக்கிரக கோபத்தோடு, தன் போதகரிடம் கூறிக் கொண்டான். அதாவது, இவ்வண்ணமாக இன்றைய விசுவாச மார்க்கத்தாரில் அநேகர், வேதத்தின் ஆழங்களை கற்றுத் தாருங்கள் நாங்கள் கேட்கின்றோம். என்னுடைய வியாபாரமும், பிள்ளைகளுடைய கல்வியும் மேம்படுவதற்கு வாக்குத்தத்தங்களை கூறுங்கள், நாங்கள் அவைகளை எங்களுடையதாகிக் கொள்கின்றோம் என்ற மனநிலையுடையவர்களாக, வெளிப்படுத்தல் விசேஷத்திலே, ஆண்டவராகிய இயேசு, ஒருவரும் அறிய கூடாதபடிக்கு முத்திரைப் போட்டிருக்கும் இரகசியங்களை கூட அறிந்து கொள்ளும்படிக்கு அயராது பிரயாசப்படுகின்றார்கள். ஆனால், ஆவியானவர், தங்களுடைய வாழ்க்கைக் குறித்த ஊரறிந்த உண்மைகளை வெளிப்படுத்தும் போது, பொதுவாக விசுவாசிகளில் அநேகர் அதிருப்தியடைகின்றார்கள். சிலரோ மூர்க்கங் கொள்கின்றார்கள். வேறு சிலர், சபைகளை விட்டு வேறு தங்கள் வழிகளை பற்றி பேசாதே அல்லது தங்கள் வழிகளை ஏற்றுக் கொள்ளும் சபைகள் இருக்கின்றதா என்று தேடிச் செல்கின்றார்கள். பிரியமான சகோதர சகோதரிகளே, கர்த்தருடைய வார்த்தைகள் நாம் நித்திய ஜீவனை அடையும்படிக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது. அவை நம்மைக் குறித்தது. நம்முடைய வாழ்க்கையைக் குறித்தது. அந்த வார்த்தையின் வெளிச்ச த்திலே நாம் நம்முடைய வாழ்க்கையை அனுதினமும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். தேவ ஒளியானது வார்த்தை வழியாக உலகத்திலே வந்திருந்தும், மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினாலே அவர்கள் தேவ ஒளியைப் பார்க்கிலும் இருளான கிரியைகளை விரும்புகின்றதால், அவர்கள் தேவனுடைய வார்த்தையானது அவர்களை குறித்த சத்தியத்தைப் கண்டித்து உணர்த்தும் போது, கசப்படைகின்றார்கள். பிரியமானவர்களே, இந்த நிலைமைகளாக உங்களுக்கு வேண்டாம். விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படிக்கு, கர்த்தருடைய வார்த்தை பேசப்படும் போது, உணர்த்தப்படும் குற்றங்களை, கர்த்தருடைய பாதத்திலே அறிக்கை பண்ணி, விட்டுவிடும்படி, உங்களைத் தாழ்த்துங்கள். தேவ ஆவியானவர் உங்களை சகல சத்தியத்திலும் நடத்திச் செல்வார்

**சங்கீதம் 19:11**

**அன்றியும் அவைகளால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன்; அவைகளைக் கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலன் உண்டு.**

**ஜெபம்**:நித்திய ஜீவனை கொடுக்கும் வார்த்தைகளை எனக்கு தந்த தேவனே, என் குறைகளைக் நான் மறைப்பதற்கு என் கோபத்தை மூடலாக பயன் படுத்தாமல் இருக்க உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

வெள்ளி | நவம்பர் 22 | 📖 மாலை வாசகம் – 1 கொரி 10:31

# யாருக்காக வாழ்கின்றீர்கள்?

சபையின் ஆராதனைகளுக்கு ஒழுங்காக சமூகமளிக்க தவறிய ஒரு விசுவாசியானவனை, அவனுடைய மேய்ப்பரானவர் சந்தித்து, அவனோடு பேசினார். தம்பி, ஆராதனைகள் இல்லாமல், நித்திரையில்லாமல், இப்படியாக உன் வாழ்க்கையை நீ வாழ்வது நல்லதல்ல, உன் வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ளு என்று கூறினார். அதற்கு அவன் மேய்ப்பரானவரை நோக்கி: “ஐயா, நான் யாருக்காக வாழ்கின்றேன்? யாருக்காக பிரயாசப்படுகின்றேன்? என் பிள்ளைகளுக்காகத் தானே வாழ்கின்றேன். அவர்கள் கல்வி கற்க வேண்டும். அவர்கள் பட்டம் பெற வேண்டும். அவர்கள் விளையாட்டு துறையிலும், இசை மீட்டுவதிலும் தேர்ச்சி பெற வேண்டும் என்றே இராப்பகலாக உழைக்கின்றேன் என்று கூறிக் கொண்டான். அதற்கு மேய்ப்பரானவர்: தம்பி, அது விசுவாசத்தின் அறிக்கையல்ல. நீ உண்மையாகவே உன் மனைவி, பிள்ளைகளை நேசிக்க வேண்டுமென்றால், நீ ஆண்டவர் இயேசுவுக்காக வாழ வேண்டும். பிதாவாகிய தேவனின் சித்தம் உன்னில் நிறைவேற இடங் கொடு. அப்போது உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சக் கொடியைப்போல் இருப்பாள் உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப்போல் இருப்பார்கள். உன் சந்ததி பாக்கியம் பெற்ற சந்ததியாக இருக்கும் என்றார். இப்படியாக, விசுவாசமார்க்கத்தாரில் சிலர், கணவனானவன், தான் மனைவிக்காக வாழ்கின்றேன் என்றும், மனைவி கணவனுக்காக வாழ்கின்றேன் என்றும் உணர்ச்சி பூர்வமாக கூறுவதை கேட்டிருப்பீர்கள். அப்படியாக அறிக்கை செய்து வருவதால், பிள்ளைகளைக் குறித்து அல்லது குடும்பத்தைக் குறித்து யாராவது ஒரு குறையை கூறிவிட்டால், அவர்கள் தங்கள் விசுவாச வாழ்க்கையை முற்றாக மறந்து போய்விடுகின்றார்கள். நாம் பிள்ளைகளைநடக்க வேண்டிய வழியிலே நடாத்த வேண்டும். கணவனும் மனைவியும், வேதம் கூறும்படி கணவனும் மனைவியுமாக வாழ வேண்டும். பிரியமான விசுவாசியே, நீ திராட்சை செடியாக ஆண்டவர் இயேசுவில் ஒட்டப்பட்ட கொடியாக இரு. அதையே ஒரு கணவன் தன் மனைவிக்கும், மனைவி தன் கணவனுக்கும் கற்றுக் கொடுக்க வேண்டும். அந்தப் பிரகாரமாக தங்கள் பிள்ளைகளையும் மெய்யான திராட்சை செடியாகிய இயேசுவில் இணைந்திருக்கும் கொடியாக வளர்க்க வேண்டும். அப்படியாக இருக்கும் குடும்பமானது எக்காலத்திலும், தளர்ந்து போகாமல், விசுவாசத்திலே நிலைத்திருக்கும் குடும்பமாக இருக்கும்.

**சங்கீதம் 128:4**

இதோ, கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான்.

**ஜெபம்**: உம்முடைய ராஜ்யத்தில் பங்கடையும்படி என்னை அழைத்த தேவனே, குடும்பத்தின் சித்தத்தையல்ல பிதாவாகிய தேவனுடைய சித்தத்தையே என் வாழ்வில் நிறைவேற்றுபவனாக இருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மனச்சாட்சியிலே சூடுண்டவர்கள்

இந்த பூமியிலே வாழும் நமக்கு கடமைகளும், பொறுப்புக்களும் உண்டு. அவைகளை நாம் பிள்ளைகளுடைய விருப்பப்படியோ, குடும்பத்தினர், உறவுகள், நண்பர்கள் விருப்பப்படியோ நிறைவேற்றாமல், பிதாவாகிய தேவனுடைய சித்தப்படி நிறைவேற்றும் போது, நம்முடைய வாழ்விலும், மற்றவர்களுடைய வாழ்விலும் நன்மை உண்டாகின்றது. சுய விருப்பப்படியும், குடும்பம், உறவுகள், நண்பர்கள், சக வேலையாட்களின் விருப்பபடியும் வாழ ஆரம்பிக்கும் விசுவாசியானவன், விசுவாசத்தைவிட்டு வஞ்சிக்கப்பட்டு போவதற்கு தனக்குதானே கண்ணி வைக்கின்றவனாக மாறிவிடுகின்றான். “ஆகிலும், ஆவியானவர் வெளி ப்படையாய் சொல்லுகிறபடி, பிற்கா லங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவி கொடுத்து, விசுவாசத்தைவிட்டு விலகிப்போவார்கள்” என்று பரிசு த்த வேதாகமம் நமக்கு எச்சரிப்பை வழங்கியிருக்கின்றது. நம்மில் ஒருவரும் மனச்சாட்சியிலே சூடுண்டு பொய்யர்களாக மாறிவிடதாபடிக்கு மிகவும் எச்சரிக்கையுள்ளர்களாக இருக்க வேண்டும். இரட்சிப்பின் ஆரம்ப நாட்களிலே தேவன்தாமே நமக்கு உணர்வுள்ள நல்ல மனசாட்சியை கொடுக்கின்றார். எடுத்துக்காட்டாக, விசுவாசிகளாக இருக்கின்ற போதிலும், சந்தர்பத்திற்கு தப்பித்துக் கொள்ளும்படிக்கு, தங்கள் குற்றங்களை ஏற்றுக் கொள்ளாமல், கணவனை பாதுகாக்க மனைவி, மனைவியை பாதுகாக்க கணவன், பிள்ளைகளை பாதுகாக்க பெற்றோர், பெற்றோரை பாதுகாக்க பிள்ளைகள் சிறிய பொய்களை சொல்ல ஆரம்பிக்கின்றார்கள். பாதிப்பில்லாத பொய்களை சொன்னால் என்ன என்ற பிரகாரமாக எண்ணிக் கொள்கின்றார்கள். அப்படியாக நல் மனசாட்சியானது உணர்த்தும் போது, சத்தியத்திற்கு விரோதமாக, பொய்யை தொடர்ந்து பேசும் போது, அவை பொய் என்கின்ற உணர்வானது மனச்சாட்சியிலே அற்றிப் போய்விடும் நிலை உண்டாகி விடுகின்றது. அதன்பின்னர், ஆவியானவரின் சத்தம் இன்ன தென்பதை உணர்ந்து கொள்ள முடியாத நிலைக்கு விசுவாசிகள் தள்ளப்பட்டு போய்விடுகின்றார்கள். அது ஒரு பரிதாபகரமான நிலை. மனச்சாட்சி சூடுண்ட நிலைமை. எனவே அந்த நிலைமைக்கு போய்விடாதபடிக்கு வேத வார்த்தையின் வெளிச்சத்திலே ஒவ்வொரு விசுவா சியும் தன் வாழ்க்கையை அனுதினும் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

**1 தீமோத்தேயு 4:1**

ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே...

**ஜெபம்:** உணர்வுள்ள சுத்த மனச்சாட்சியை எனக்கு தந்த தேவனே, அற்ப காரியங்களிலே என்னை நீதிமானாக காண்பிக்கும்படி என் மனசாட்சியை உணர்வற்றுப் போக பண்ணாதபடிக்கு எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சிந்தனை, சொல், செயல்

தியானங்கள், வேதப்படிப்புக்கள், தேவ செய்திகள், தீர்க்கதரிசனங்களை கேட்கும் போது, மனம் தளர்ந்து போய்விடாதிருங்கள். தேவ கிருபை என்றுமுள்ளது. சகல சத்தியத்திலும் உங்களை வழிநடத்தும் சத்திய ஆவியானவர் உங்களோடிருக்கின்றார் என்பதை மறந்து போய்விடாதிருங்கள். பாவத்திற்கு தன் காலை விலக்கிக் கொள்கின்றவன், தேவன் கொடுத்த நல் மனச்சாட்சியை உணர்வுள்ளதாக காத்துக் கொள்கின்றான். பாவத்திற்கு தன்னை பழக்கிக் கொள்கின்றவன், தன் மனச்சாட்சியை உணர்வற்றுப் போகப் பண்ணுகின்றான். அதன் பின்னர், பாவம் தன்னை மேற்கொள்ளாது என்றும் கூறிக் கொள்வான். எனவே, நாம் எதை நாளாந்தாம் சிந்திக்கின்றோம், கேட்கின்றோம், பேசுகின்றோம், பார்க்கின்றோம், உடுத்துகி ன்றோம், செல்கின்றோம், செய்கின்றோம் என்பதைக் குறித்து கவனமு ள்ளவர்களாக இருக்க வேண்டும். மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யர்களை பின்பற்றாதபடிக்கும், நம் மனசாட்சியானது சூடுண்டு போகாதபடிக்கும், தேவ வார்த்தைகளின் வெளிச்சத்திலே உணர்வுள்ள ஜீவியம் ஜீவிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, நெறியற்ற திரை ப்படங்களை பார்த்து பழகிக் கொள்கின்றவன் அல்லது ஊரையும் உலகையும் பார்க்க சுற்றுலா சென்று, உலகத்தார் பெரும்பான்மையாக களியாட்டங்களுக்காக சேர்ந்து கொள்ளும் இடங்களுக்கு தன் சொந்த தீர்மானத்தின்படி போக்கும் வரத்துமாக இருக்கும் விசுவாசியானவன், நாட்கள் கடந்து சென்றதும், அவன் உலக போக்கிற்கு தன்னைப் பழக்கிக் கொண்டதால், அவன் செல்லும் சபையிலே பரிசுத்தமாக வாழ்கின்றவர்களை பார்த்து, இவர்கள் நாகரீகம் தெரியாதவர்கள், நியாயப்பிரமாணத்தை பின்பற்றுகின்றவர்கள் என்று சொல்லிக் கொள்வான். நம்முடைய இருதயமானது, தேவனுடைய வார்த்தை விழுந்து முளைக்கும் பண்பட்ட நிலமாக எப்போதும் காணப்பட வேண்டும். ஒரு விசுவாசியின் இருதயமானது, மனிதர்கள் போக்கும் வரத்துமாக மிதித்துப் போடுகின்ற நிலமாகவோ, உணர்வற்றுப் போன கடினமாக கற்பாறையைப் போன்ற நிலமாகவோ, முட்செடிப் புதர்கள் நிறைந்ததாகவோ இருந்தால், அங்கே தேவனுடைய வார்த்தையின் பலன் உண்டாகாது. எனவே, எங்கு செல்ல வேண்டும், என்ன செய்ய வேண்டும் என்று உங்கள் சுத்த மனசாட்சியிலே ஒலிக்கும் தேவ சத்தத்தை அற்பமாக எண்ணி அசட்டை செய்து விடாதீர்கள். இருதயத்தை எல்லாக் காவலோடும் காத்துக் கொள்ளுங்கள்.

**நீதிமொழிகள் 4:23**

**எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக் கொள், அதினிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்.**

**ஜெபம்**: ஒவ்வொரு நாளும் புதிய கிருபையை எனக்கு தருக்கின்ற தேவனே, உம்முடைய சத்தத்தைக் கேட்டு, அதன்படி என் வாழக்கையை நான் வாழும்படிக்கு, எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவ சித்தத்தை நிறைவேற்றுங்கள்

முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாக வாழ்ந்து வந்த நாம், நம் சரீரங்களை ஒடுக்குவதால் நீதிமான்களாக ஆகிவிடலாம் என்ற கொள்கையுடையவர்களாக வாழ்ந்து வந்தோம். மூன்று நாட்கள் உணவு உண்ணாமல் இருந்தவன், ஒருநாள் உணவு உண்ணாமல் இருந்தவனை விட மேலானவன் என்று எண்ணியிருந்த நாட்கள் உண்டு. சிலர் விவாகம் பண்ணாமல், இல்லற வாழ்க்கையை தவிர்த்துக் கொள்வதாலும், சில போஜனபதார்த்தங்களை விலக்கிக்கொள்வதாலும்,மேன்மை நிலையை அடையலாம் என்று எண்ணிக் கொண்டார்கள். பலவிதமான மத நம்பிக்கையுடையவர்களும் இவைகளை அதிகமாக செய்கின்றவன், நீதிமான் எனப்படுவான் என்று அவைகளை ஒழுங்காகவும் கிரமமாகவும் செய்து வந்தார்கள். ஆனால் அவையொன்றும் மனித குலத்தின் பாவ தோஷத்தை நீக்கி, ஆன்மீக இரட்சிப்பை வழங்கக்கூடாதிருந்து. "எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்." *(ரோமர் 3:23-24)* கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல. *(எபேசியர் 2:8-9)*. அப்படியாக இரட்சிப்பை பெற்ற பின்னர், விசுவாசிகளில் சிலர், தேவனுக்கு முன்பாக அதி உத்தமர்களாக தங்களை காண்பிக்கும் பொருட்டு, தாங்கள் தங்கள் பழைய கிரியைகளை மறுபடியும் செய்வற்கு தங்களை ஒப்புக் கொடுத்து, அதுமட்டுமல்லாமல், அவைகளை உபதேசங்களாக்கி மற்றவர்கள் செய்ய வேண்டும் என்று அவர்களுக்குள், தங்கள் கிரியைகளை திணிக்கின்றார்கள். விவாகம் பண்ணாமல் தனித்திருக்க வரம் பெற்றவர்கள் இருக்கின்றார்கள். தனித்திருந்து ஊழியம் செய்யும்படி ஒருசிலர் பிரத்தியேகமாக அழைக்கப்பட்டிருக்கின்றார்கள். சிலர் தங்கள் சரீரத்தில் ஏற்பட்ட நோய்களின் நிமித்தம், மருத்துவ ஆலோசனையின் படி சில உணவு வகைகளை தவிர்த்துக் கொள்கின்றார்கள். ஆனால், இவைகளை உபதேசங்களாக்கி, விசுசவாச மார்க்கத்தாரை குழப்புகின்றவர்கள் விசுவாசத்தைவிட்டு வழுவிப்போன மனசாட்சியிலே சூடுண்ட பொய்யர்கள் என்று வேதத்திலே காண்கின்றோம். இப்படிப்பட்ட உபதேசங்களை பின் பற்றி விசுவாசத்தினின்று வழுவிப்போகாதபடிக்கும், மறுபடியும் இந்த உலக த்திற்கு ஒத்த வேஷம் தரியாமல், மனம் மறுரூபமாகும் படிக்கு மேலானவைகளை நாடித் தேடுங்கள்.

**1 தெச 5:21**

**எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்.**

**ஜெபம்**: என்னை இரட்சித்த தேவனே, நான் மறுபடியும் என் பழைய கிரியைகளுக்கு திரும்பாமல், உம்முடைய வார்த்தைக்கு கீழ்படிந்து, நீர் சொல்லும் கிரியைகளை நிறைவேற்றி முடிக்கும்படி என்னை கரம்பிடித்து நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

செவ்வாய் | நவம்பர் 26 | 🕮 மாலை வாசகம் - மத்தேயு 7:4 – 6

# பொறுப்புகளும் கடமைகளும்

பிரியமானவர்களே, இந்நாட்களிலே நாம் தொடச்சியாக, விசுவாசத்திலே நிலைத்திருப்பதின் அவசியத்தையும், விசுவாசத்தில் இருந்து வழுவிப் போனவர்களின் வாழ்க்கையிலே இருக்கும் அறிகுறிகள் அல்லது அடையாளங்கள் என்ன என்பதைக் குறித்தும் வேத வார்த்தைகளின் படி ஆராய்ந்து தியானித்து வருகின்றோம். முக்கியமாக, முதலாவதாக நாம்விசுவாசத்தைவிட்டு வழுவிப் போகாதபடி மிகவும் கவனமுள்ளவர்களாக இருக்க வேண்டும். விசுவாசிகள் என்று பெயர் பெற்ற சில தகப்பன்மார், தங்கள் சொந்த குடும்பத்தை விசாரிக்காமல், தங்களுடைய ஊதியத்திலே குடித்து, வெறிக்கின்றவர்களாவும், மனைவி பிள்ளகைளை அடிக்கின்றவர்களாகவும் காணப்படுகின்றார்கள். அதுபோல, சில பெற்றோர், தங்கள் வாழ்க்கையில் பல தியாகங்களை செய்து தங்கள் பிள்ளைகளை கண்ணும் கருத்துமாக வளர்த்து வருகின்றார்கள். பிள்ளைகள் வளர்ந்து, படித்து, கைநிறைய உழைக்கும் காலம் வரும் போது, தங்கள் பெற்றோரை கவனிக்காமல், நாட்டின் வழக்கப்படி, தங்கள் வாழ்க்கையை தாங்கள் கவனித்தால் போதும் என்று எண்ணி, பெற்றோரை அவர்களுடைய முதிர் வயதிலே தள்ளிவிடுகின்றார்கள். ஆம், விசுவாசிகள் என்ற பெயர் பெற்றவர்கள் பல காரணங்களை முன்வைத்து இப்படியாக நடந்து கொள்கின்றார்கள். ஆனால், உலகத்திலே அவிசுவாசிகளாக இருக்கின்றன்வர்களில் சிலர், தங்கள் தாய்தந்தையரை கடைசி மூச்சுவரைக்கும் நன்றாக கவனிக்கின் றார்கள். அவிசுவாசிகளாகிய பெற்றோரில் பலர், தங்கள் பிள்ளைகளை கருத்தோடு வளர்க்கின்றார்கள். நான் ஆண்டவர் இயேசுவை அறிந்தவன், இரட்சிக்கப்பட்டவன், தேவ பயம் உள்ளவன் என்று ஒருவன் தன்னைக் உலகத்திற்கு காண்பித்துக் கொண்டு, தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அப்படிப்பட்டவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான் என்று வேதத்திலே வாசிக்கின்றோம். ஒருவேளை பெற்றோர் கடினமுள்ளவர்களாக இருக்கலாம், மனைவி பிள்ளைகள் சொற் கேட்காதவர்களாக இருக்கலாம். ஒரு விசவாசியானவன் தன் சிலுவையை எடுத்துக் கொண்டு, ஆண்டவராகிய இயேசுவை பின்பற்றி செல்ல வேண்டும்.

**1 தீமோத்தேயு 5:8**

**ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்.**

**ஜெபம்**: அன்பின் தேவனே, என் குடும்பத்தின் கடமைகள் பொறுப்புக்களையும் மறந்து விசுவாசத்திலிருந்து வழுவிப்போய்விடாதபடிக்கு, எனக்கு பிரகாசமுள்ள மனக் கண்களை தந்து வழிநடத்தி செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# துன்பங்களிலே சோர்ந்து போய்விடாதிருங்கள்

"அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதா யிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்." (2 தீமோ 3:12). "தீமைசெய்து பாடநுபவிப்பதிலும், தேவனுக்குச் சித்தமானால், நன்மைசெய்து பாட நுபவிப்பதே மேன்மையாயிருக்கும்." (1 பேதுரு 3:17) என்ற சத்தியத்தை விசவாசமார்க்கத்தார் யாவரும் நன்கு அறிந்திருக்கின்றார்கள். இந்த துன் பமும், உபத்திரவங்களும், பாடுக ளும் எங்கிருந்து அல்லது யாரிட மிருந்து விசுவாசிகளுக்கு உண்டா கலாம்? உலகத்தாரிடத்தில் மாத்தி ரம்இருந்தா?அவிசுவாசிகளிடம் மாத் திரமா அல்லது விசுவாசிகளிடமி ருந்தும் உண்டாகலாமா? சபை விசு வாசிகளிடம்மாத்திரம் இருந்தா அல் லது சொந்த குடும்பத்தாரிட மிருந் தும் உண்டாகலாமா? கணவனிடமிருந்து மனைவிக்கும், மனை வியிடமி ருந்துகவணனுக்கும் உண்டாகலாமா? பிள்ளைகளிடமிருந்து பெற்றோரு க்கும், பெற்றோரிடமிருந்து பிள்ளைகளுக்கும் உண்டாகலாமா? ஒரு விசு வாசியானவனுக்கு துன்பங்கள், உபத்திரவங்கள், பாடுகள் எங்கிருந்தும், எவரிடமிருந்தும் உண்டாகலாம். அப்படியானால், ஏன் சில விசுவாசிகள், தங்கள் பெற்றோரை கவனியாமல் தள்ளிவிடுகின்றார்கள்? அந்திய கால த்திலே பெற்றோர் சம்பூரணராக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கி கின்றார்களா? ஏன் அவர்கள் நிமித்தம் பாடுகளையும் உபத்திரவங்க ளையும் சகித்துக் கொள்ள கூடாமல் இருக்கின்றார்கள்? விசுவாசிகள், பாவம் நிறைந்த உலகத்திலே, அதிக நேரத்தை பாடசாலை யிலும், வேலை செய்யும் இடங்களிலும், வெளி இடங்களிலும் செலவு செய்கி ன்றார்கள். பாவமும் அநீதியும் அங்கே நடந்தாலும் அவற்றி ற்கு உட ன்படாமல், அவற்றை சகித்துக் கொண்டு, நீதியை நடப்பித்து, தாங்கள் அந்த இடத்திற்கு வந்த நோக்கத்தை நிறைவேற்றித் திரும்புகின்றார்கள். ஒருவேளை பெற்றோர் அவிசுவாசிகளாக இருந்தாலும், அவர்களை கிறிஸ்துவினிமித்தம் ஏன் சகித்துக் கொள்ள கூடாதிருக்கின்றார்கள்? அந் நாட்களிலே, "எவனாகிலும் தகப்பனையாவது தாயையாவது நோக்கி: உனக்கு நான் செய்யத்தக்க உதவி எது உண்டோ, அதைக் காணிக் கையாகக் கொடுக்கிறேன் என்று சொல்லி, தன் தகப்பனையாவது தன் தாயையாவது கனம்பண்ணாமற் போனாலும், அவனுடைய கடமை தீர் ந்ததென்று" தறவான உபதேசத்தைப் போதித்து வந்தார்கள். இப்படி ப்பட்டவர்கள் விசுவாசிகள் அல்ல என்று வேதம் கூறுகின்றது. நாமோ விசுவாசத்திலே நிலைத்திருப்போமாக.

**மத்தேயு 15:6**

**உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்கிவருகிறீர்கள்.**

**ஜெபம்:** உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணு என்று கூறிய தேவனே, எல்லா சூழ்நிலைகளிலும் நான் உம்முடைய வார்த்தையின்படி என் வாழ்வைக் காத்துக் கொள்ள எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

📖 மாலை வாசகம் – நீதிமொழிகள் 20:9

# “சடங்காச்சாரங்கள்”

ஆதி அப்போஸ்தலர்களின் நாட்களிலே கலாத்தியாவிலே இருந்த விசுவாசிகள் யூதரல்லாத புறஜாதிகளாக இருந்து தேவ கிருபையினாலே, மீட்பர் இயேசுசின்மேல் கொண்ட விசுவாசித்தினாலே இரடசிப்பை பெற்றுக் கொண்டார்கள். நாட்கள் கடந்து சென்றதும், யூதமார்க்கத்திலிருந்து இரட்சிக்கப்பட்ட சிலர் அவர்களிடத்தில் வந்து, இரட்சிப்பு நிறைவேறும்படி யூதருடைய நியாயப்பிரமாண கிரியைகளையும் நடப்பிக்க வேண்டும் என்று கலாத்தியாவிலுள்ள விசுவாசிகளை தங்கள் பழைய மார்க்க வழிபாடுகளுக்கு உட்படுத்திவிட்டார்கள். முக்கியமாக, கிறிஸ்துவை அறிந்த பின்னரும் ஆண்கள் சரீரத்திலே விருத்தசேதனம் செய்ய வேண்டும். அதனாலேயே நீதிமான்களாக வாழ முடியும் என்று அவர்களுக்கு தவறான உபதேசங்களை கற்பித்து வந்தார்கள். அதனால், கலாத்தி சபையோர் விசுவாசத்தை விட்டு வழுவிப்போகும் நிலைமைக்கு உட்படுத்தப்பட்டார்கள். அதை அறிந்து அப்போஸ்தலராகிய பவுல், கலாத்தியா சபைக்கு கூறியதாவது: புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற் போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசுகிறிஸ்து சிலு வையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்குமுன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே. ஒன்றைமாத்திரம் உங் களிடத்தில் அறிய விரும்புகிறேன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசுவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே ஆவியைப் பெற்றீர்கள்? ஆவியினாலே ஆரம்பம்பண்ணின நீங்கள் இப் பொழுது மாம்சத்தினாலே முடிவுபெறப்போகிறீர்களோ? நீங்கள் இத் தனை புத்தியீனரா? இத்தனை பாடுகளையும் வீணாய்ப் பட்டீர்களோ? அவைகள் வீணாய்ப்போயிற்றே. அன்றியும் உங்களுக்கு ஆவியை அளித்து, உங்களுக்குள்ளே அற்புதங்களை நடப்பிக்கிறவர் அதை நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசுவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே செய்கிறார்? அப்படியே ஆபிரகாம் தேவனை விசு வாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்று விசுவாசத்தைவிட்டு சீக்கரமாக மதச் சடங்காச்சார கிரியைகளுக்க திரும்பிய அவர்களை கடிந்து கொண்டார். பிரியமானவர்களே, விசுவாசமில்லாமல் ஒருவனும் தேவனுக்கு பிரியமாக இருக்க முடியாது. எனவே, வஞ்சிக்கும் உபதேசங்களுக்கு இடங்கொடுத்து, விட்டுவந்த சடங்காச்சாரங்களை மறுபடியும் பின்பற்றாதடிக்கு மிகவும் எச்சரிக்கையுள்ளவர்களாக இருங்கள்.

**கலாத்தியர் 3:26**

**நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே.**

**ஜெபம்**: கிருபையினால் என்னை இரட்சித்த என்னை நீதிமானாக்கிய தேவனே, நான் உம்முடைய வசனத்தின்படி நீதிமானுக்குரிய கிரியைகளை நடப்பிக்கும்படிக்கு என் மனக்கண்கள் எப்போதும் பிரகாசமுள்ளதாக இருப்பதாக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவனுக்கேற்ற கிரியைகள்

ஒரு கிராமத்திலே வசித்து வந்த ஊழியரை சந்திக்கும்படிக்கு, தூரத்திலுள்ள பட்டணத்தில் வசித்து வந்த விசுவாசியானவனொருவன் சென்றிருந்தான். அந்நாட்கள் கடும் வெப்பமும், காங்கையுமுள்ள நாட்களாக இருந்தது. அங்கு சென்று உழியரை கண்டபோது, அவருடைய அறையிலுள்ள மின்விசிரியானது, அதனிடத்திலிருந்து கழற்றப்பட்டிருந்தது. அந்த கடும் வெப்பத்திலும், அவர், இப்படியாக தன்னை ஒறுத்து வாழ்கின்றார் என்று சபையிலும் ஊரிலுமுள்ள பலர் பெருமை பாராட்டிக் கொண்டிருந்தார்கள். விருந்தாளியாக வந்த அந்த விசுவாசியானவன், அந்த ஊழியரை சில தசாப்தங்களாக அறிந்திருந்தபடியால், அவரை நோக்கி, இந்த மின்விசிறியின் தார்பரியம் என்ன? இப்படியான வெக்கையான நாட்களிலும் மின்விசிறியில்லாமல்யாரையும் திருப்திப்படுத்த பார்க்கின்றீர் கள் என்று சுவாரசியமாக கேட்டக் கொண்டான். அந்த ஊழியர் விசுவாசியானவனை நோக்கி: தம்பி, நான் யாரையும் திருப்திப்திப்படுத்த இதை செய்யவில்லை. மின்விசிறி பழுதடைந்து போனது உண்மைதான். என் உடல் ஆரோக்கியத்திற்கு மின்விசிறி உகந்ததல்ல என்று என் குடும்ப மருத்துவர் சொன்னபடியால், நான் அதைதிருத்தாமல் அப்படியே விட்டு விட்டேன். இதை நான் விசுவாசிகளுக்கு எடுத்துக் கூறினாலும், சிலர் அதைப் பொருட்படுத்தாமல், நான் இந்த மின்விசிறியினால் உத்தமானாகின்றேன் என்ற பிரகாரமாக பேசிக் கொள்கின்றார்கள் என்று சிரித்தபடிகூறிக் கொண்டார். பிரியமானவர்களே, நாம் கிருபையினாலே விசுவாசத்தை கொண்டு இரட்சிக்கப்பட்டு, தேவனாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கின்றோம். நாம் சிக்கனமாக வாழ்வது நல்லது. ஆனால், படுத்துறங்குவதற்கு மெத்தை இருக்கும் போது, அதைவிட்டு இறங்கி, கல்லின்மேல் படுத்துறங்குவதால் தேவனுடைய பார்வையிலே அதிக நீதிமான்களாக முடியாது. நாம் செய்ய வேண்டிய கிரியைகள் உண்டு. அவைதேவனுக்குரியவைகள். அவருடைய நல்ல போர்ச்சேவகர்களாய், அவருடைய வார்த்தையின்படி, அவருடைய சித்தத்தை நிறைவேற்றும் பாதையிலே, ஒருவேளை கல்லின்மேல் படுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டால் அவருடைய நாமத்தினிமித்தம் பாடுகளையும் உபத்திரவங்களையும் சகித்துக் கொண்டு, கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மை எதுவுமே பிரிக்க முடியாது என்ற நிச்சயத்தோடு, விசுவாசதிலே உறுதியாய் நிலைத்திருப்போமாக.

**ரோமர் 8:35**

உமதுநிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும்,

**ஜெபம்:** அன்பின் தேவனே, உம்முடைய வார்த்தையின்படி, உமக்கேற்ற கிரியைகளை மனத்தாழ்மையோடும், கீழ்படிவோடும் நான் செய்யும்படிக்கு ஞானமுள்ள இருதயத்தை தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உத்தம ஊழியர்கள் யார்?

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த சன்மாரக்கனான எஜமானனொருவன், தன் வீட்டு வேலைகளை கவனிப்பதற்காக ஒரு உழியனை வேலைக்கமர்த்தினான். அந்த ஊழியனும், தன் எஜமானனை கனப்படுத்த வேண்டும் என்ற மனதுடன், அவரை கண்டதும் எழுந்து நிற்பான். அவர் நடுச்சாமத்திலே வீடு திரும்பினாலும், அவர் வரும்வரை இரவுணவை உண்ணாதிருப்பான். எஜனமானனை குறித்து யாரும் தவறாக பேசினால், அவர்களைக் கடுமையாக கடிந்து கொண்டு சண்டைக்கு ஆயத்தமுள்ளவனாக இருந்தான். இப்படியான பல காரியங்களை அவன் கருத்தோடு செய்து வந்தான். ஒருநாள் அவனுடைய எஜமானனானவன், அந்த ஊழியனை அழைத்து, அவனை நோக்கி: நீ என்னை கனப்படுத் வேண்டும் என்று அநேக காரியங்களை செய்து வருகின்றாய். ஆனால், நான் உனக்கு கொடுத்த அநேக வேலைகளோ செய்யப்படாமல் இருக்கின்றது. சிலவற்றை நீ பின்போட்டிருக்கின்றாய். நான் உன்னிடத்தில் கொடுத்த வேலைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக அல்லவா உன்னை வேலைக்கு அமர்த்தினேன். நான் சொல்வதை நீ செய்யாமல், நீ விரும்பியதை செய்வதினாலே,நீ என் வார்த்தையை கனவீனப்படுத்துகின்றாயே என்று அவனை அவர் கடிந்து கொண்டார். ஆம், பிரியமானவர்களே, அந்த எஜமானனைப் போல, நம்முடைய ஆண்டவராகிய இயேசுவும், நம்மை உண்மையுள்ளவர்கள் என்று கருதி, நம்மிடத்திலே பொறுப்புக்களை கொடுத்திருக்கின்றார். அவர் சொன்ன இலகுவான காரியங்களை செய்யாமல், நம்முடைய சரீரத்தை ஒடுக்குவதால் என்ன பலன்? ஒரு விசுவாசியானவனுக்கு வேதத்தை வாசித்து, தியானிக்க நேரமில்லை. ஆனால், ஆண்டவர் இயேசுவை பற்றி யாரும் குறை கூறினால், அவர்களோடு சண்டை செய்ய எப்போதும் ஆயத்தமுள்ளவனாக இருப்பான். இது மாம்சத்திலே உண்டாகும் கிரியைகள். நம்முடைய போராயுதங்கள் மாம்ச பெலன் அல்ல என்பதை அறிந்திருந்தால், துன்மார்க்கர் தங்கள் அறியாமையிலே சண்டைகளை ஆரம்பிக்கும் போது, நாம் அதை ஜெபத்திலே தரித்து வெற்றி சிறக்கின்றவர்களாக மாறவேண்டும். இது தேவனுக்கு பிரியமான கிரியை. எனவே, வேறு பிரிக்கப்பட்ட ஜனங்களாகிய நாம், விசுவாசத்திலே நிலைத்திருந்து, இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற கிரியைகளை எப்போதும் நடப்பிப்போமாக.

**2 கொரிந்தியர் 10:4**

**எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது.**

**ஜெபம்:** பிதாவின் சித்தத்தை செய்யும்படிக்கு என்னை வேறு பிரித்த தேவனே, நான் மறுபடியும், எனக்கு பிரியமானவைகளை செய்யாதபடிக்கு, உமக்கு பிரியமானவற்றை நிறைவேற்ற என்னை வழிநடத்தி செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.